بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 16

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஷவ்வால் 18 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஷஹாதத் 17 ★ ஏப்ரல் 17 2025


**அல்லாஹ்வின் கட்டளை**

اَیَّامًا مَّعۡدُوۡدٰتٍ ؕ فَمَنۡ کَانَ مِنۡکُمۡ مَّرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ وَعَلَی الَّذِیۡنَ یُطِیۡقُوۡنَہٗ فِدۡیَۃٌ طَعَامُ مِسۡکِیۡنٍ ؕ ○

பொருள்:
(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும்.
(அல்பக்கரா: 185)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஒவ்வொரு விஷயத்தையும் அல்லாஹ்விடம் மட்டுமே வேண்ட வேண்டும்
## வல்ல இறைவனோ வல்லமை மிக்கவனாக இருக்கின்றான்
## அவன் நாடினால் ஒரு காசநோயாளிக்கும் கூட நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்க முடியும்

**மனிதன் இறைவனுக்காக தன்னை தானே கடினத்தில் ஆழ்த்திக் கொள்கின்றபோது நீ ஏன் உன்னை கடினத்தில் ஆழ்த்திக் கொண்டுள்ளாய்? என்று இறைவன் தாய் தந்தையைப் போன்று கருணை புரிந்தவாறு அந்த நபரிடம் கூறுவான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஃபித்யா கொடுப்பதன் நோக்கம்

ஃபித்யா எதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது? என்று ஒருமுறை எனது உள்ளத்தில் தோன்றியது. அப்போது அது நற்பேறு வேண்டி (நிர்ணயிக்கப்பட்டுள்ளது); அதன் மூலம் நோன்பு நோற்பதற்கான நற்பேறு கிடைக்க வேண்டும் என்பது தெரிய வந்தது. இறைவனது இருப்பு மட்டுமே (மனிதனுக்கு) நற்பேறை வழங்குகின்றது. ஒவ்வொரு விஷயத்தையும் அல்லாஹ்விடம் மட்டுமே வேண்ட வேண்டும். வல்ல இறைவனோ வல்லமை மிக்கவனாக இருக்கின்றான். அவன் நாடினால் ஒரு காசநோயாளிக்கு கூட நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்கவிட முடியும்.

ஆக நோன்பு நோற்பதற்கான அந்த ஆற்றல் கிடைத்து விட வேண்டும் என்பதே ஃபித்யா கொடுப்பதன் நோக்கம் ஆகும். மேலும் இது வல்ல இறைவனின் அருளினாலேயே நிகழ்கின்றது. எனவே என்னைப் பொருத்த வரை, மனிதன் இவ்வாறு அதிகமாக துஆ செய்ய வேண்டும். இறைவா! இது உனது அருளுக்குரிய ஒரு மாதம் ஆகும்; மேலும் நான் இதிலிருந்து இழப்பிற்குரியவனாக இருந்து விடுகின்றேன்; அடுத்த வருடம் நான் உயிருடன் இருப்பேனா? இல்லையா? என்பது தெரியாது. அல்லது இந்த விடுபட்ட நோன்புகளை என்னால் வைக்க முடியுமா? முடியாதா? என்பதும் தெரியாது.

இவ்வாறு (இறைவனிடம்) நற்பேறு வேண்டினால் பின்னர் அப்படிப்பட்ட உள்ளத்திற்கு வல்ல இறைவன் ஆற்றல் வழங்கிவிடுவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

### நோன்பு கடமையாகும்

இறைவன் நாடியிருந்தால் பின்னர் ஏனைய சமுதாயங்களைப் போன்று இந்த சமுதாயத்திலும் எந்த நிபந்தனைகளையும் விதித்திருக்க மாட்டான். ஆனால், அவன் நன்மைகளுக்காக நிபந்தனைகளை விதித்திருக்கின்றான். என்னைப் பொருத்த வரை அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது (இறைவா!) என்னை இந்த மாதத்தில் நோன்பு நோற்பதிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடாதே! என்று மனிதன் உண்மையுடனும், உயர்வான தூய்மையுடனும் இறை சன்னிதானத்தில் வேண்டும்போது, பின்னர் வல்ல இறைவன் அவனை இழப்பிற்குரியவனாக ஆக்குவதில்லை. மேலும், அது போன்ற நிலையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோயுற்று விட்டாலும் கூட பின்னர் இந்த நோயானது அவனுக்கு கருணையாக அமைகின்றது. ஏனெனில், ஒவ்வொரு செயலும் எண்ணத்தை அடிப்படையாக கொண்டுள்ளது. நம்பிக்கையாளர் என்பவர் தமது இருப்பால் தம்மைத் தாமே இறைவனின் வழியில் பற்று மிக்கவர் என்பதை நிரூபணம் செய்ய வேண்டும். எந்த நபர் நோன்பில் இருந்து இழப்பிற்குரியவராக இருக்கின்றாரோ அதே நேரம், அந்தோ! நான் ஆரோக்கியமாக இருந்திருந்தால் நான் நேன்பு நோற்று இருப்பேனே! என்று தமது உள்ளத்தில் வேதனையுடன் கூடிய இந்த எண்ணத்தை கொண்டிருந்தால், மேலும் அவரது உள்ளம் இந்த விஷயத்திற்காக மன்றாடிக் கொண்டிருந்தால் பின்னர் வானவர்கள் அவருக்காக நோன்பு நோற்பார்கள். நிபந்தனை என்னவென்றால், போலியான காரணங்களை தேடுபவராக இருக்கக் கூடாது. அவ்வாறிருந்தால் பின்னர் வல்ல இறைவன் அவரை ஒருபோதும் நற்கூலியில் இருந்து இழப்பிற்குரியவனாக வைக்க மாட்டான்.

இது ஒரு நுட்பமான விவகாரம் ஆகும். அதாவது, ஒரு நபருக்கு (அவரது நஃப்ஸின் சோம்பலின் காரணமாக) நோன்பு (நோற்பது) கஷ்டமாக இருக்கின்றது என்றால், மேலும் நான் நோயாளி ஆகிவிடுவேன் ; மேலும் எனது உடல்நிலை எப்படி இருக்கின்றது என்றால், நான் ஒருவேளை உணவு உண்ணாவிட்டால் பின்னர் இன்ன இன்ன நோய்கள் எனக்கு ஏற்பட்டு விடும் ; இப்படி ஆகிவிடும்; அப்படி ஆகிவிடும் என்று அவர் (சுயமே) கற்பனை செய்து கொள்கின்றார் என்றால் பின்னர் அப்படிப்பட்ட நபர் வல்ல இறைவனின் அருட்கொடையை சுயமே தமக்கு கடினமானதாக ஆக்கிக் கொள்கின்றார்.

அவ்வாறிருக்க அவர் எப்படி இந்த நற்கூலிக்கு தகுதி படைத்தவராக திகழ்வார்? எனினும், ரமலான் வந்து விட்டது என்ற விஷயத்தால் எந்த நபரின் உள்ளம் மகிழ்ச்சியடையுமோ மேலும் ரமலான் வந்து விட வேண்டும் ; அதில் நான் நோன்பு நோற்க வேண்டும் என்று நான் அதற்காக காத்திருந்தேன்; ஆனால் நோயின் காரணமாக என்னால் நோன்பு நோற்க முடியவில்லை என்று எவர் வேதனைப்படுவாரோ அத்தகைய நபர் விண்ணில் நோன்புகளிலிருந்து இழப்பிற்குரியவராக இருப்பதில்லை. இந்த உலகில் ஏராளமான மக்கள் போலியான காரணங்களை தேடக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும், நாம் எப்படி உலகவாசிகளை ஏமாற்றிவிடுகின்றோமோ அதேபோன்று இறைவனையும் ஏமாற்றி விடலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். போலியான காரணங்களை தேடுபவர் தன்னிடமே விவகாரத்தை தேடிக் கொள்கின்றார். மேலும் போலியான விஷயங்களை சேர்த்துக் கொண்டு அந்த விவகாரத்தை சரியானதாகக் கருதுகின்றார். ஆனால், இறைவனின் பார்வையில் அது சரியானது கிடையாது. போலியான காரணங்களுக்கான வாசல்

இதன் தொடர்ச்சி ...9-ம் பக்கம் காண்க

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் துஆக்களின் முக்கியத்தும் குறித்த ஈமானை வலுவூட்டும் பேருரை**

துஆ என்பது வந்துவிட்ட துன்பத்திற்கு எதிரிலும், மேலும் வரவிருக்கின்ற துன்பத்திற்கு எதிரிலும் பயனளிக்கின்றது. அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் துஆ செய்வதை மேற்கொள்வது உங்களுக்கு கண்டிப்பானதாகும் (நபிமொழி)

எந்த மக்கள் துன்பம் இறங்குவதற்கு முன்னர் துஆக்கள் செய்கின்றார்களோ, மேலும் இஸ்திஃக்ஃபார் செய்கின்றார்களோ மேலும் தான தருமங்கள் செய்கின்றார்களோ அல்லாஹ் அவர்களின் மீது கருணை புரிகின்றான். மேலும் இறை தண்டனையில் இருந்து அவர்களை காப்பாற்றுகின்றான் என்பதை (உங்களுக்கு) நான் புரிய வைக்க விரும்புகின்றேன்
-(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

இறைத் தண்டனையிலிருந்து நீங்கள் தப்பிக்க விரும்பினால் பின்னர் அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்
(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

எங்களுக்கு அநீதியாளர்களிடம் இருந்து இரட்சிப்பு வழங்குவாயாக! மேலும் அவர்களை பழிவாங்குவாயாக! மேலும் எவர்கள் எங்களுடன் பகைமை கொள்கின்றார்களோ அவர்களுக்கு எதிராக நீயே எங்களுக்கு உதவி புரிவாயாக! என்று நாம் ரமலானில் துஆ செய்தால் பின்னர் அல்லாஹ் ஒரு மகத்தான புரட்சியை உருவாக்கி விடுவான்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 மார்ச் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு அமான் மாத**ம் 07 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

وَ اِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ
اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ
فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ
لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

(அல்பக்கரா: 187)

அல்லாஹ் கூறுகின்றான்:

(தூதரே!) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன் ; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக).

ரமலான் துவங்கியதுமே உள்ளத்தில் தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உருவாகி விடுகின்றது. ஏனெனில், இது அருளுக்குரிய மாதமாகும். இதில் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. எனவே பொதுவாக மக்கள் மஸ்ஜிதின் பக்கமும் அதிகம் கவனம் செலுத்துகின்றனர். மஸ்ஜித்களில் வருகையின் எண்ணிக்கையும் அதிகரித்து விடுகின்றது. அது ஃபஜ்ர் தொழுகையாக இருந்தாலும்; இஷா தொழுகையாக இருந்தாலும் சரியே!. சாதாரண நாட்களிலோ ஃபஜ்ர் மற்றும் இஷா தொழுகைகளில் ரமலானில் இருக்கின்ற அளவிற்கு வருகை இருப்பதில்லை. நாம் மஸ்ஜிதின் பக்கம் செல்ல வேண்டும் ; மேலும் அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்ட வேண்டும் என்ற எண்ணம் குறைந்தபட்சம் மக்களுக்கு இந்த நாட்களில் வந்து விடுகின்றது. இது அல்லாஹ்வின் அருளாகும்.

இதற்கான ஓர் அடிப்படையும் இருக்கின்றது. அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: நான் ரமலானின் நாட்களில் நரகத்தின் வாசல்களை அடைத்து விடுகின்றேன்; ஷைத்தானை கட்டி வைத்து விடுகின்றேன்; மேலும் சொர்க்கத்தின் வாசல்களை திறந்து விடுகின்றேன்.

(புகாரி கிதாபுல் பதஉல் ஹல்க், பாப் ஸிஃப் இப்லீஸ், ஹதீஸ் 3277)

இதனால் “அநேகமாக ரமலானில் மட்டுமே இறைணக்கம் (செய்வது) அவசியம்” ஆகும்; மேலும், ரமலானில் என்ன துஆக்கள் செய்யப்படுமோ அல்லது இறைவணக்கங்கள் செய்யப்படுமோ அவையே நமது பாவமன்னிப்புக்கான ஏற்பட்டை உருவாக்கும் என்று மக்கள் எண்ணம் கொள்கின்றனர். அஹ்மதி அல்லாதோரின் சேனல்கள் இருக்கின்றன ; மேலும் இஸ்லாமிய நாடுகளின் சேனல்கள் இருக்கின்றன ; அவற்றிலும் இந்த ஹதீஸ் மீண்டும், மீண்டும் ஒளிபரப்பப்படுகின்றது. ஆனால், இது தவறான சிந்தனையாகும்.

ரமலானில் இறை வணக்கத்தின் பக்கம் அல்லாஹ் ஏன் கவனமூட்டியுள்ளான்? என்றால் நீங்கள் அதனை உங்களது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகதான்.

இந்த விஷயம் இல்லையென்றால் பின்னர் ரமலானில் மட்டுமே செய்யப்படுகின்ற இறை வணக்கங்கள் எந்த வகையிலும் பயன்படாது. இன்னும் கூறப்போனால், நீயோ ஒரு மாதம் மட்டுமே இறை வணக்கம் செய்திருக்கின்றாய்: (மீதம்) பதினோரு மாதம் என்ன செய்தாய்? என்று அல்லாஹ் கேட்டபான். எனவே இது போன்ற தவறான புரிதலை மனிதன் தன்னிடமிருந்து அகற்றிக் கொள்ள வேண்டும். அதாவது ரமலானில் மட்டும் தொழுதால் போதுமானது ; மேலும் ரமலானில் மட்டும் பள்ளிக்கு சென்றால் போதுமானது என்ற எண்ணத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எந்த நபர் ஈமானிய எதிர்பார்ப்புகளுடனும், நற்கூலிக்கான எண்ணத்துடனும் ரமலானின் இரவுகளில் எழுந்து தொழுகின்றாரோ அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன.

(புகாரி கிதாபுஸ் ஸவ்ம், பாம் மன் ஸாம ரமலான ஈமான், ஹதீஸ் 1901)

நிச்சயமாக இது அன்னாருடைய வழிகாட்டலாகும். மனிதன் இந்த நன்மைகளை நிரந்தரமாக தனது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்தால், மேலும் தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்தினால், தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தினால், உபரியான இறை வணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்தினால் பின்னர் ரமலானில் அதிக கவனம் உருவாகும் என்ற சிந்தனை உருவாக முடியும். இறை வணக்கம் செய்யக் கூடியவர்கள்; நிரந்தரமாக இறை வணக்கம் செய்யக் கூடியவர்கள்; அவர்கள் இந்த சிந்தனையுடன் இந்த பணியை செய்கின்றனர். ஆனால், ரமலானில் மட்டும் இரவுகளில் எழுந்து (தொழுது) விட்டால் போதுமானது என்று சில மக்கள் கருதுகின்றனர்.

மனிதன் தவறுகளின் உருவமாக இருக்கின்றான். தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆனால், அல்லாஹ் மிகவும் கருணையாளனாகவும், மீண்டும், மீண்டும் கருணை காட்டக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் மன்னிக்கக் கூடியவனும் ஆவான். எனவே அவன் நமக்கு இந்த சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றான். அதாவது உங்களிடம் நடப்பு ஆண்டில் தவறுகள் நிகழ்ந்து விட்டன என்றால் இனி புதிதாக இந்த உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதில்

நிலைத்திருப்பதற்கும் முயற்சி செய்யுங்கள்; அதாவது இனி நாங்கள் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருப்போம் ; மேலும் அல்லாஹ் வழங்கியுள்ள அந்த அனைத்து நன்மைகளுக்கான கட்டளைகளையும் நிறைவேற்றுவோம் என்று நீங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்.

எனவே இந்த விஷயத்தை ஒரு முஸ்லிம் குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, உங்களிடம் நேர்வழி உருவாகிவிட வேண்டும் என்பதற்காக ரமலானில் இறை வணக்கம் செய்வதற்கு அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். மேலும் நேர்வழி என்பது ஒரு மாதத்திற்கு (மட்டும்)உருவாகுவது அல்ல. மாறாக நிரந்தரமாக உருவாக்க வேண்டிய விஷயமாகும். அல்லாஹ் இந்த விஷயத்தையே கூறியுள்ளான்: அதாவது, அல்லாஹ் நினைவூட்டுவதற்காகவும், மேலும் தனது ரஹ்மானிய்யத்தின் வெளிப்பாட்டிற்காகவும் மீண்டும் மீண்டும் ரமலானை கொண்டு வருகின்றான். வழிதவறி நிற்கும் மனிதனுக்கு மீண்டும் தனது கடமைகள் நினைவிற்கு வந்து விட வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கின்றான். அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகளும் நினைவுக்கு வந்து விட வேண்டும்; அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும் நினைவுக்கு வந்து விட வேண்டும். பின்னர் அவர் பார்க்க வேண்டும் ; அதாவது அல்லாஹ் மற்றும் அவனது மற்ற அடியார்களின் உரிமைகளை எப்படி நிறைவேற்ற முடியும்? என்று அவர் பார்க்க வேண்டும்.

அல்லாஹ்விற்குரிய உரிமைகளை செலுத்துவதில் எப்படி செயலாற்ற முடியும்? என்று பார்க்க வேண்டும்.

سَاَلَكَ عِبَادِيْ

(எனது அடியார் கேள்வி கேட்கும் போது) என்று அல்லாஹ் கூறும்போது, எனது அடியார்கள் என்பதன் பொருள் இறை நேசர்கள் ஆவர். ஒருவருடைய நேசராக இருக்கும் ஒருவரோ ஆண்டின் பதினோறு மாதங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டாம்; ஒரு மாதம் மட்டும் அன்பை வெளிப்படுத்தினால் போதும் என்று கூறுவதில்லை. ஆக, அல்லாஹ்வின் நேசருடைய பணி இதுவாகும்; அல்லாஹ்வின் அடியார்களின் பணி இதுவாகும். அதாவது, அல்லாஹ் எந்த பணியை செய்வதற்கு கட்டளை வழங்கியுள்ளானோ அதனை நிரந்தரமாக செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் பதினோரு மாதங்களில் கவனக்குறைவு ஏற்பட்டுள்ளது என்றால் பின்னர் இந்த நாட்களில் குறிப்பாக அவற்றிற்காக முயற்சி செய்ய வேண்டும் அல்லது அதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த பலவீனங்களும், குறைகளும் மீண்டும் வெளிப்படாமல் இருக்கும்.

உண்மையான நேசரோ தனது அன்பரின் எல்லா கூற்றையும் ஏற்றுக் கொள்வார். உலகியல் காதலர்கள் இருக்கின்றனர்; மேலும், உலகியல் காதலர்களிடமோ ஏராளமான தீமைகள் இருக்கின்றன. மேலும் அவற்றால் பாதிப்புகளும் ஏற்படக் கூடும் அல்லது குறைந்தபட்சம் சிலமுறை அவற்றால் நன்மைகள் கிடைப்பதில்லை. ஆனால், வல்ல அல்லாஹ்வின் மீதான நேசத்திலோ நன்மையைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. முழுக்க முழுக்க நன்மையே இருக்கின்றது. ஏனெனில் அவன் அனைத்து நன்மைகளின் ஊற்று ஆவான். எல்லா தீமைகளிலிருந்தும் பாதுகாப்பவன் ஆவான்; எல்லா துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பு வழங்குபவன் ஆவான்; என்னிடம் வேண்டுங்கள் என்று அவன் கூறுகின்றான். நீங்கள் துஆ செய்யுங்கள்; நான் உங்களுக்கு பதிலும் அளிப்பேன் என்று அவன் கூறுகின்றான். உண்மையான நேசரோ அல்லாஹ்வின் நெருக்கத்தை வேண்டுவார்.

எனவே நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தை வேண்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களது இறை வணக்கங்களில், ரமலானின் இறை வணக்கங்களில்போது, உங்களது உலகியல் நலன்களை மட்டுமே வேண்டுவதற்கு முயற்சி செய்யாதீர்கள். மாறாக, உங்களது நேசனின் நெருக்கத்தை பெறுவதற்காகவும் துஆ செய்யுங்கள்.

**அல்லாஹ்வே! எங்களுக்கு உனது நெருக்கத்தை வழங்குவாயாக! எங்களுக்கு ஒப்புக் கொள்ளப்படும் துஆக்களை செய்வதற்கு நற்பேறு வழங்குவாயாக! எங்களுக்கு சந்திப்பை வழங்குவாயாக! எங்களது நோன்புகளை ஒப்புக் கொள்வாயாக! என்று அவனிடம் துஆ செய்யுங்கள்.**

இந்த விஷயம் நடைபெறும்போது பின்னர் ரமலானிற்குப் பிறகும் எந்த தீமையும் வெளிப்படாது. இன்னும் கூறப்போனால், நன்மைகளுக்கான நற்பேறு கிடைத்துக் கொண்டே செல்லும். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் எவை? அடியார்களுக்குரிய உரிமைகள் எவை? என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் மீண்டும், மீண்டும் கவனமூட்டியுள்ளான். நீங்கள் அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

திருக்குர்ஆனில் எழுநூறு கட்டளைகள் இருக்கின்றன என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். (கிஷ்தீ நூஹ், ரூஹானீ கஸாயீன் தொகுதி 19, பக்கம் 26)

ரமலானில் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும் சிறப்பு கவனமூட்டல் வழங்கப்பட்டுள்ளது. நாம் அதனை ஓதும்போது பின்னர் அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கின்ற அவற்றின் கட்டளைகளையும் தேடுவோம்.

இன்னும் கூறப்போனால், ஓரிடத்திலோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எழுநூறுக்கும் மேற்பட்ட கட்டளைகள் (திருக்குர்ஆனில்) இருப்பதாக கூறியுள்ளார்கள். எனவே இந்தக் கட்டளைகளை நாம் தேடும்போது, பின்னர் நாம் அமல் செய்வதற்கு முயற்சி செய்வோம். இதுவே ஓர் உண்மையான (இறை) நேசரின் பணியாகும். அதாவது தனது அன்பரின் கூற்றை ஒப்புக் கொள்வதற்கு எல்லா சாத்தியமான முயற்சியையும் செய்ய வேண்டும்.

ஏனெனில், நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்று எனது அடியார்களிடம் கூறுவீராக! என்று அல்லாஹ் கூறுகின்றான். நான் கூறியது போன்று, அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு உண்மையாக கட்டுப்படுவதுதான் முழுமையான ஈமான் ஆகும்.




அடுத்து இந்த விஷயமும் இருக்கின்றது. அதாவது ஈமானும், நற்செயலும் எப்படிப்பட்ட விஷயம் என்றால் அது ஒன்றோடு ஒன்று இணைந்தே செல்கின்றது. எனவே இந்த வசனத்தில் இதுவும் எழுதப்பட்டுள்ளது: அதாவது எனது கூற்றை ஒப்புக் கொள்ளுங்கள். அந்த கூற்றுகள் என்பதன் பொருள் நற்செயல்களை மேற்கொள்ளுங்கள் என்பதே ஆகும். நன்மைகளில் நிலைத்திருக்க வேண்டும். மேலும், இறை வணக்கம் செய்தவாறு துஆக்கள் செய்யுங்கள் என்பதாகும்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: நான் உங்களது நண்பனாக ஆகிவிடுவேன். உதாரணமாக, மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

اَللّٰهُ وَلِيُّ الَّذِيْنَ اٰمَنُوْا

பொருள்: அல்லாஹ் நம்பிக்கை கொள்கின்ற அந்த மக்களின் நண்பன் ஆவான்.(அல்பக்கரா: 258)

மேலும் அல்லாஹ்வுடன் நட்பும், அவன் மீது ஈமானும் இருந்தால் பின்னர் உங்களுக்கு அல்லாஹ் தனது நெருக்கத்தை நல்குவான். மேலும் இந்த நெருக்கத்தை அருளிக் கொண்டே செல்வான். இதில் முன்னேற்றம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இது ஓரிடத்தில் சென்று நின்று விடக் கூடிய நெருக்கம் கிடையாது. அவன் துஆக்களையும் கேட்கக் கூடியவன் ஆவான்.

எனவே ரமலானில் இந்த அந்தஸ்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும், இதன் பிறகு நாம் இந்த அந்தஸ்திலிருந்து பின்தங்கி விட்டால் மேலும் இந்த இறை வணக்கங்களுக்கு ரமலானில் செலுத்தி வந்த உரிமையை செலுத்தாவிட்டால் மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், பின்னர் அல்லாஹ் எப்படி நண்பனாக ஆகுவான்? இந்நிலையில் அல்லாஹ்வோ நண்பனாக ஆகமாட்டான்.

அல்லாஹ் சில நிபந்தனைகளையும் வைத்திருக்கின்றான். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அதாவது, அடியாராக திகழ வேண்டும் : முற்றிலும் அவனுக்காகவே ஆகிவிட வேண்டும் என்ற விஷயத்தையே முதலில் அல்லாஹ் கூறியிருக்கின்றான். தூயவராக திகழ்ந்து அவனை வணங்க வேண்டும். அவனை அனைத்து ஆற்றல்களின் உறைவிடமாக கருத வேண்டும்; மேலும், எந்த உலகியல் இறைவனையும் உருவாக்கிக் கொள்ளக் கூடாது. பொய் தெய்வங்களை உருவாக்கக் கூடாது. சிறு சிறு மக்களை தமது நோக்கங்களுக்காக தன்னிலை மறந்து தமது இறைவனாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. இதுவோ பின்னர் இணை வைத்தலின் பக்கம் கொண்டு சென்று விடும்.

தற்போது கடந்த நாட்களில் ஜெர்மனியைச் சேர்ந்த சிறப்பு பாதுகாப்புப் படை வீரர்களும் வந்திருந்தனர். நாங்கள் எவ்வாறு எங்களது இன்ன உயர் அதிகாரியை மகிழ்ச்சிப்படுத்துவது? என்று அவர்கள் கேட்டனர். நான் அவர்களிடமோ இதையே கூறினேன்: நீங்கள் என்ன பணி செய்தாலும், இறைவனை திருப்திப்படுத்துவதற்காக செய்யுங்கள்; மேலும் நீங்கள் இறைவனை திருப்திப்படுத்துவதற்காக

பணி செய்வீர்கள் என்றால் பின்னர் அல்லாஹ் சுயமே உங்களது அதிகாரியின் கவனத்தையும் இதன் பக்கம் (அதாவது உங்கள் மீது) திருப்பி விடுவான். மேலும் அவர்கள் உங்களது நன்மைக்கான ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்வார்கள். மேலும் உங்களுடன் கருணை மற்றும் பரிவுடன் நடந்து கொள்வார்கள். ஆனால், எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் இதுவே ஆகும். அதாவது, அல்லாஹ்விடம் அவனது கருணை மற்றும் பரிவை வேண்டுவது ஆகும். மேலும் அவனது கட்டளைகளின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்வதாகும்.

தற்போது நாம் சவ்த்ரி ஜஃபருல்லாஹ் கான் ஸாஹிபுடைய உதாரணத்தை கொடுக்கின்றோம். எவ்வாறு அன்னார் ஒரு முறை மகாராணியின் அரசவையில் நிம்மதியின்மையை வெளிப்படுத்தினார்கள் என்ற உதாரணத்தைப் பாருங்கள்!

அன்னார் (அந்த அரசவையில்) அமர்ந்திருந்தார்கள். மேலும் மீண்டும், மீண்டும் கடிகாரத்தை பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். என்ன காரணம்? என்று அதிகாரி கேட்டபோது, நான் இறை வணக்கம் செய்வற்கான நேரம் ஆகும்; இறை வணக்கத்திற்கான அந்த நேரம் தற்போது நெருங்கி விட்டது; மேலும் இது அல்லாஹ்வின் கட்டளையாகும். இதனை நான் மேற்கொள்வது அவசியமாகும். எனவே இந்த நேரம் வீணாகி விடுமோ? என்று நான் நிம்மதியிழந்து இருக்கின்றேன் என்று கூறினார்கள். அப்போது, (அதிகாரிகளாகிய) அவர்கள் அதற்கான ஏற்பாட்டை செய்து விட்டார்கள்.

(காலித் ரப்வா, மாதாந்திர இதழ், டிசம்பர் 1985, பக்கம் 89)

ஆக இது துணிவு ஆகும். மேலும் இது அந்த ஈமானின் தேட்டமாகும். இது ஒவ்வோர் அஹ்மதியிடத்திலும் இருக்க வேண்டும். நாம் உதாரணங்கள் கொடுக்கின்றோம். நாம் இந்த முன்மாதிரிகளை பின்பற்றவும் வேண்டும்.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு எண்ணற்ற விஷயங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எண்ணற்ற ஹதீஸ்கள் இருக்கின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக திகழ்வதற்கான உரிமையை நிறைவேற்றியுள்ளார்கள். மேலும் நமக்கு நன்மைகளின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். தமது பைஅத் உடன்படிக்கையில் பெரும்பாலான நிபந்தனைகள் இவையே ஆகும். அதாவது அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்பதே ஆகும். எனவே நாம் எந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டுமோ அவை இவையே ஆகும். மேலும், நாம் இதனை செய்யும்போது பின்னர் அல்லாஹ் நமது வலீ ஆகிவிடுவான். மேலும் நண்பனாகவும் ஆகிவிடுவான். நமது துஆக்களையும் செவியேற்பான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: பொறுமையின்மையை வெளிப்படுத்தாத மக்களின் துஆக்களை அல்லாஹ் கேட்கின்றான். ( முஸ்லிம், கிதாபுத் திக்ர் வத் துஆ, ஹதீஸ் எண்: 6936)

நான் அதிகமாக துஆக்கள் செய்து விட்டேன்; அல்லாஹ்வோ கேட்பதே இல்லை என்று கூறக்கூடாது. இது நிராகரிப்பாகும். மேலும் ஈமானில் இருந்து விலக்கி தொலைவில் கொண்டுச் செல்லக் கூடிய விஷயமாகும். ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் இதிலிருந்து விலகி இருக்க வேண்டும். எனவே எதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமோ அவை இந்த விஷயங்களே ஆகும்.

நாங்கள் நிறைய துஆக்கள் செய்தோம் (ஆனால், நிறைவேறவில்லை) என்று சில மக்களோ எனக்கும் இவ்வாறு எழுதிவிடுகின்றனர்.

முதல் விஷயமோ இதுவாகும். அதாவது, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக துஆக்கள் செய்யவில்லை. அவர்கள் தமது உலகியல் நோக்கங்களுக்காக துஆக்கள் செய்திருக்கின்றனர். மேலும், அவர்களுக்கு உலகியல் விவகாரங்கள் உருவானபோது அந்த நேரத்தில் அவர்கள் துஆக்கள் செய்துள்ளனர். உலகியல் விவகாரங்களின் தீர்வுகளுக்காக மட்டும் அல்லாஹ்விடம் செல்லும்போது, அல்லாஹ்வும் அப்படிப்பட்ட விஷயங்களை எப்படி கேட்பான்?

தன்னுடன் சாதாரண நாட்களிலும் நட்பிற்கான உரிமை செலுத்தப்படும்போதும், அவரது பேச்சைக் கேட்கும்போதும் தான் நண்பர் என்பவர் நட்பிற்கான உரிமையை நிறைவேற்றுவார். அப்போதுதான் அவரும் உங்களது பேச்சைக் கேட்பார். எனவே இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, **நாம் வெறும் நமது (சொந்த)நோக்கங்களுக்காக, நமது உலகியல் பணிகளுக்காக மட்டும் அல்லாஹ்விடத்தில் செல்லக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக அல்லாஹ்விடத்தில் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.**

நாம் இதனை செய்யும்போது பின்னர் அல்லாஹ்வும் துஆக்களை ஒப்புக் கொள்வான். இன்ஷா அல்லாஹ். பின்னர் அவன் கேட்கவும் செய்கின்றான். அவற்றிற்கு பதிலும் அளிக்கின்றான். ஏனெனில், நான் எனது அடியார்களுக்கு பதில் அளிக்கின்றேன் என்று அவன் சுயமே கூறியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதுவோ நண்பர்களுக்கிடையிலான விவகாரமாக இருக்கின்றது. சிலசமயம் நண்பன் தனது (சக) நண்பனின் கூற்றை ஏற்றுக் கொள்கின்றான்; சிலசமயம் (சக) நண்பன் தனது கூற்றை ஒப்புக் கொள்ளும்படி செய்கின்றான். இதே போன்றே இறைவனும் நடந்து கொள்கின்றான். ஆனால், வெளிப்படையில் ஒரு நம்பிக்கையாளரின் துஆவை அவன் ரத்து செய்கின்றான் என்றாலும் கூட இதுவும் உண்மையில் அவருடைய நன்மைக்காக செய்கின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 386, காதியான் பதிப்பு 1984-ம் ஆண்டு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள விஷயங்களின் அர்த்தம் இதுவாகும். ஏனெனில், நான் துஆ செய்தேன் (பலனில்லை) என்று தற்போது கூறுப்படுவதைப் பொருத்த வரை - முதல் விஷயம் என்னவென்றால், தனது உலகியல் நோக்கங்கள் முன்னால் இருந்தபோது துஆ செய்யப்பட்டுள்ளது. மார்க்கத்திற்காக, அதன் முன்னேற்றத்திற்காக, மார்க்கத்தில் முன்னேறுவதற்காக, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக எந்த துஆவும் செய்யப்படவில்லை. அடுத்து, ஒரு நம்பிக்கையாளர் இருக்கின்றார்; அவருடைய சில துஆக்களும் கூட சில முறை ஒப்புக் கொள்ளப்படுவதில்லை.

ஆக, அன்னார் (அலை) கூறினார்கள்: இதுவோ நட்புக்கான விவகாரம் ஆகும். சிலசமயம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சிலசமயம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. எதனை ஏற்றுக் கொள்வதில்லையோ அதிலும் கூட அல்லாஹ் தனது நண்பனின் நன்மைக்கான ஏற்பாட்டை செய்கின்றான். எப்படிப்பட்ட சில விஷயங்கள் இருக்கின்றன என்றால், எதனை ஏற்றுக் கொள்வதில்லையோ அதற்குப் பகரமாக அவருக்கு வேறு வழிமுறையில் இறைவன் நற்கூலி வழங்கிவிடுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இறைவன் கூறுகின்றான்: அதாவது இறைவனின் இருப்பிற்கு என்ன சான்று உள்ளது? என்று எனது அடியார்கள் என்னைக் குறித்து கேள்வி கேட்டால் அதற்குரிய பதில் இதுவாகும். அதாவது நான் மிக அருகில் இருக்கின்றேன். அதாவது எந்த பெரும் சான்றுகளுக்கான தேவையும் இல்லை.எனது இருப்பை மிகவும் நெருக்கமான வழிமுறைகளிலிருந்து புரிந்து கொள்ள முடியும். மிகவும் எளிதாக எனது இருப்பிற்கான சான்று உருவாகி விடுகின்றது.

மேலும் இறைவன் கூறுகின்றான்: அந்த சான்று இதுவாகும். அதாவது, துஆ செய்யக் கூடியவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவரது துஆவை கேட்கின்றேன். மேலும், எனது இல்ஹாம் மூலமாக அவரது வெற்றிக்கான நற்செய்தியை கொடுக்கின்றேன். அதனால் எனது இருப்பின் மீது மட்டும் நம்பிக்கை வருவதில்லை ;மாறாக, நான் முழு வல்லமை படைத்தவன் என்பதன் மீதும் உயர்தரமான நம்பிக்கை உருவாகி விடுகின்றது.

அல்லாஹ் (துஆவை) கேட்கின்றபோது அதற்கு பதிலும் அளிக்கின்றான்.

நமது ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ் பத்திரிகையை சார்ந்தவர்கள் பல ஆண்டுகளாக GOD SUMMIT என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். பல்வேறு சமயங்களில் அவர்கள் இந்த நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். இந்த ஆண்டும் அவர்கள் நடத்தியுள்ளனர். மேலும் அதில் மக்கள் தங்களுடைய துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவங்களையும் கூறுகின்றனர். எவ்வாறு அல்லாஹ் எங்களது துஆக்களை செவியுற்றான்; மேலும் அந்த துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டதன் காரணமாக எவ்வாறு அவர்களுக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கை பிறந்தது? என்ற சம்பவங்களை மக்கள் அதில் எடுத்துரைக்கின்றனர். ஆனால் நிபந்தனை இதுவே ஆகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நான் அவர்களின் குரலை செவியேற்கும் அளவிற்கு அவர்கள் தங்களிடத்தில் இறையச்சம் மற்றும் இறைப் பற்றை

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: உங்களின் குரல் செவியேற்கப்படும் பொருட்டு இறையச்சத்தின் நிலையை உருவாக்குங்கள்; இறைப் பற்றை உருவாக்குங்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீங்கள் (உங்களிடத்தில்) இறையச்சத்தின் நிலையையும், இறைப் பற்றையும் உருவாக்குங்கள்; அப்போதுதான் நான் (உங்கள் துஆக்களை) செவியேற்பேன் ;அல்லாமல் வெறுமனே (உங்கள் துஆக்களை) செவியேற்க மாட்டேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: என் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அன்னார் (அலை) இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கின்றார்கள். அடியார்கள் தங்களுக்கு முழுமையான இறை ஞானம் கிடைப்பதற்கு முன்னர், இறைவன் இருக்கின்றான்; மேலும் அவன் எல்லா ஆற்றல்களையும், வல்லமைகளையும் படைத்திருக்கின்றான் என்ற விஷயத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில், எந்த நபர் ஈமான் கொள்கின்றாரோ அவருக்கு இறை ஞானம் வழங்கப்படுகின்றது.

தற்போது அல்லாஹ்

فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ

என்ற வசனத்தில் இதனையும் கூறியுள்ளான்: அதாவது அவர்கள் எனது கூற்றை ஏற்க வேண்டும்; மேலும் என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

எவர்கள் அல்லாஹ்வுடைய அடியார்களாக இருக்கின்றார்களோ அவர்களிடமே இதனை கூறியுள்ளான். உண்மையான நம்பிக்கையாளர்களாகவும், உண்மையான அடியார்களாகவும் இருக்கின்ற தனது அடியார்களுக்கு அல்லாஹ் இதனை கூறிக் கொண்டிருக்கின்றான். நான் முன்னரும் கூறியது போன்று, **பலவீனமான நிலையும் உருவாகி விடுகின்றது. அப்போது அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தில் சென்று தமது ஈமானை வலிமைப்படுத்த வேண்டும். மேலும், இந்த நிலை உருவாகிவிடும்போது, அல்லாஹ் மட்டுமே அனைத்து வல்லமைகளுக்கும் அதிபதி ஆவான் என்ற நிலை உருவாகி விடும்போது அவன் மீதான ஈமானில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும்.** எனது அடியார் இந்த அளவுக்கு அருகில் வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாரே! என்று அவன் பார்க்கும்போது அடியாரின் ஈமானை அதிகரிப்பான்.

அடுத்து கூறினார்கள்: இறை ஞானம் அவருக்கு வழங்கப்படுகிறது. அப்போதுதான் அல்லாஹ் அவரது துஆக்களை செவியேற்கும் நிலையில் அவர் இருப்பார். மேலும், அவர் அல்லாஹ்வின் உண்மைத்துவத்தையும் அடையாளத்தையும் கண்டு கொள்வார் அல்லது அவரது ஏதாவது ஒரு துஆவை அல்லாஹ் செவியேற்கவில்லை என்றால் பின்னர் அவருக்கு எப்படிப்பட்ட மன அமைதியை அல்லாஹ் வழங்குவான் என்றால் இறைவன் எனது துஆவை செவியேற்கவில்லை என்ற எண்ணம் அவருக்கு வராது. அல்லாஹ் வேறு ஏதாவது ஒரு வடிவில் எனக்கான தேவைகளை முழுமை செய்து விடுவான் என்ற எண்ணம் அவருக்கு தோன்றி விடும்.

அன்னார் (அலை) இதனையும் கூறியுள்ளார்கள்: இறையச்சம் இருக்க வேண்டும்; அல்லாஹ்விற்கான உரிமைகளையும் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்; மேலும் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்க வேண்டும். இதுவே இறையச்சம் ஆகும்.

ஆக, அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: நான் உங்களது துஆக்களை செவியேற்பேன்.மேலும் ஈமானில் மனிதனை முன்னேறச் செய்து கொண்டே செல்வேன். ஓர் இறை ஞானம் உருவாகிக் கொண்டே செல்லும். பின்னர் இறை ஞானம் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: முழுமையான இறை ஞானம் உருவாகிக் கொண்டே சென்று விடும்.

(அய்யாமே ஸுல்ஹ், ரூஹானி கஸாயீன் தொகுதி 14, பக்கம் 260 - 261) அடுத்து,

يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ

என்று திருக்குர்ஆனில் வருகின்றது.

அதாவது மறைவானவற்றின் மீது ஈமான் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்கு மிகவும் நுட்பமான விளக்கத்தை வழங்கியுள்ளார்கள். ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: கைப் (மறைவானவன்) என்பது அல்லாஹ்வின் (பண்புப்) பெயராகும்.

கூறினார்கள் : **ஒவ்வொரு துஆவிற்கு முன்னரும், இறைவன் இருக்கின்றான்; அவன் எண்ணற்ற பண்புகளைக் கொண்டிருக்கின்றான்; மேலும் அவன் எல்லா ஆற்றல்களையும், வல்லமைகளையும் படைத்திருக்கின்றான் என்ற நம்பிக்கை (அடியாருக்கு) இருக்க வேண்டும்.** இந்த நம்பிக்கையுடன் அல்லாஹ்வை நோக்கி முன்னேறி செல்லும்போது, அவனுக்கு முன்னால் குனியும்போது, அவனிடம் துஆக்கள் கேட்கப்படும்போது பின்னர் உங்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய முழுமையான அடையாளம் கிடைக்கும். இறை ஞானம் கிடைக்கும். மேலும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அடையாளத்தையும் காண்பீர்கள். பல மக்கள் அல்லாஹ்வின் அருளினால் (அந்த அடையாளத்தை) காண்கின்றனர். சில சம்பவங்களையும் எடுத்துரைக்கின்றனர். நான் கூறியது போன்று, GOD SUMMIT என்ற நிகழ்ச்சியில் பல மக்கள் எடுத்துரைத்துள்ளனர். மேலும் அதன் மூலம் ஈமான் வலிமையடைகின்றது. நாங்கள் அல்லாஹ்வின் இருப்பின் மீது முழு நம்பிக்கை கொள்கின்றோம் ; ஈமான் கொண்டிருக்கின்றோம் என்று வெறும் நாவளவில் கூறிவிட்டு அவனது கட்டளைகளின்படி அமல் செய்யாமல் இருப்பது என்பதல்ல. தொழுகைகளை ஆண்டு முழுவதும் தொழ வேண்டும். வெறும் ரமலானில் மட்டும் தொழுவதற்கு முயற்சி செய்வது என்பது கூடாது; எவ்வாறு இன்றைய நாட்களில் பள்ளிவாசலில் மக்களின் வருகை இருக்கின்றதோ இதேபோன்று எப்போதும் வருகை இருக்க வேண்டும். அஹ்மதிகள் தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். இது அல்லாஹ்வின் அருளாகும். ஆயினும் இன்னும் எவர்களிடம் எல்லாம் பலவீனங்கள் இருக்கின்றனவோ அவர்கள் தமது பலவீனங்களின் பக்கம் பார்வை செலுத்த வேண்டும். மேலும், நாம் ரமலானை எப்படிப்பட்ட ரமலானாக மாற்ற வேண்டும் என்றால் அது நமது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்தக் கூடியதாகவும், நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் சிறப்பான அடியார்களாக ஆக முடியும். அவனது கூற்றுகளை ஏற்கக் கூடியவர்களாக இருப்போம்; பின்னர் அதன் விளைவாக அல்லாஹ் நமது துஆக்களையும் ஒப்புக் கொள்வான். எனவே இந்த ரமலானில் இந்த உறுதிமொழியை எடுக்க வேண்டும். அதாவது நாங்கள் எங்களது இறை வணக்கங்களுக்கு உயிர் கொடுப்போம்; மேலும் அதற்காக அல்லாஹ்விடம் துஆக்களையும் வேண்டுவோம் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும், அல்லாஹ்வே! எங்களுக்கு இந்த உறுதிமொழியை முழுமை செய்யக் கூடிய நற்பேறை வழங்குவாயாக! என்று துஆ செய்ய வேண்டும். பின்னர் முழுமையான முயற்சியால் அதனை முழுமை செய்வதற்காக உங்களது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்கு முயற்சியும் செய்ய வேண்டும். எனவே இந்த முயற்சி செய்யப்படும்போது, மேலும் அதற்காக நாம் நமது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு முழு ஆற்றல்களுடன் இதில் ஈடுபடும்போது, பின்னர் சுயமே அல்லாஹ்வுடன் எந்த அளவிற்கு நெருக்கமான தொடர்பு உருவாகி விடும் என்றால் பின்னர் "எனது கூற்றுகளை ஒப்புக் கொள்கின்ற அந்த மக்களுக்கு நான் வலீ ஆகிவிடுவேன்" என்று அவன் கூறியது போன்று இறைவன் ஒரு நண்பனாகிவிடுவான்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களில் எவருக்காக துஆவிற்கான வாசல் திறக்கப்பட்டதோ அவருக்கு ஒருவகையில் கருணையின் வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் அல்லாஹ்விடம் என்ன விஷயம் கேட்கப்படுகின்றதோ அவற்றில் பாதுகாப்பை வேண்டுவது எல்லாவற்றையும் விட மிகவும் விருப்பத்திற்குரியதாகும்.

(திர்மிதி, கிதாபுத் தஃவாத், ஹதீஸ் எண், 3548)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

துஆ என்பது வந்துவிட்ட துன்பத்திற்கு எதிரிலும், மேலும் வரவிருக்கின்ற துன்பத்திற்கு எதிரிலும் பயனளிக்கின்றது. அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் துஆ செய்வதை மேற்கொள்வது உங்களுக்கு கண்டிப்பானதாகும்.

தற்போது (பாருங்கள்!) ரமலானின் நாட்களில் மட்டுமே ஆபத்துகளோ அல்லது கடினங்களோ வருவதில்லை; பல்வேறு நேரங்களில் வந்து கொண்டிருக்கின்றன. எனவே அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் இந்த நாட்களில் மட்டும் துஆக்கள் செய்யாதீர்கள்; அல்லது நீங்கள் இந்த துன்பங்கள் அகல்வதற்காக தேவைப்படும்போது மட்டும் துஆக்கள் செய்யாதீர்கள்.மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

துஆ என்பது இன்னும் வந்து விடாத கஷ்டங்களிலிருந்தும், மேலும் ஒருநேரத்தில் வரவிருக்கின்ற கஷ்டங்களிலிருந்தும் (நம்மை) பாதுகாக்கின்ற பணியை செய்கின்றது. எனவே நீங்கள் நிரந்தரமாக துஆ செய்து கொண்டிருங்கள்.

அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வந்து விடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருங்கள். என்ன கஷ்டங்கள் வந்திருக்கின்றனவோ அவற்றிலிருந்தும் அல்லாஹ் பாதுகாத்து வைப்பானாக! மேலும் அல்லாஹ்வின் என்னென்ன அருட்கொடைகள் இருக்கின்றவோ அவற்றிலிருந்தும் (நமக்கு) வழங்கிக் கொண்டிருப்பானாக! மேலும், எதிர்காலத்தில் கஷ்டங்கள் ஏதும் வரவிருக்கின்றனவா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். எனவே அல்லாஹ் அந்த துன்பங்களையும், அந்த கஷ்டங்களையும் நீக்குவானாக! மேலும் எப்போதும் நன்மையை நல்கிக் கொண்டிருப்பானாக!

இந்த நிலை இருக்கும்போதுதான் அல்லாஹ் நம்பிக்கையாளரின் வட்டத்தில் வைத்திருக்கின்ற அந்த உண்மையான நம்பிக்கையாளர் என்று மனிதன் அழைக்கப்படுவான்.

எனவே துஆக்களில் நன்மைக்கான வழிகளை அல்லாஹ்விடம் நீங்கள் வேண்டும் போது பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கடந்தகால துயரங்களிலிருந்தும் பாதுகாப்பில் வந்து விடுவதற்கான ஏற்பாட்டை செய்யக் கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள்; எதிர்காலத்திலும் தப்பித்துக் கொண்டிருப்பீர்கள்.

எனவே இந்த கருணைக்கான வாசல்கள் திறக்கப்படுவதற்காக நாம் நிரந்தரமாக நமது வாழ்க்கையில் எப்படிப்பட்ட புரட்சியை உருவாக்க நேரிடும் என்றால், அல்லாஹ்வுடன் நமது தொடர்பு நிலைத்திருக்க வேண்டும்; மேலும், மகிழ்ச்சியிலும், துன்பத்திலும், எளிமையிலும், கடினத்திலும் எல்லா நேரமும் அல்லாஹ்வின் அருளை வேண்டிக் கொண்டிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நமது இறைவன் ஒவ்வோர் இரவிலும் அடிவானம் வரை இறங்கி வருகின்றான். இரவின் மூன்றாவது பகுதி எஞ்சியிருக்கின்றபோது, அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: என்னை அழைப்பவர் எவர் இருக்கின்றார்? நான் அவருக்கு பதில் அளிப்பதற்கு! நான் அவருக்கு கொடுப்பதற்கு என்னிடம் கேட்பவர் எவர் இருக்கின்றார்? நான் அவரை மன்னிப்பதற்கு என்னிடம் பாவமன்னிப்பை வேண்டுபவர் எவர் இருக்கின்றார்? (புகாரி, கிதாபுத் தஃவாத், ஹதீஸ் எண்: 6321)

தற்போது இது ரமலானுடன் மட்டும் நிபந்தனைக்குட்பட்டதாக இல்லை. இங்கோ சாதாரண நாட்களுக்கான விஷயம் கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதாவது ஓர் அடியார் என்னிடம் இரவின் பிற்பகுதியில் எப்போது (துஆ) வேண்டினாலும் நான் அவருக்கு அருளுகின்றேன்; நான் அவருக்கு கொடுக்கின்றேன்; அவரது கூற்றிற்கு பதிலும் அளிக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

எனவே ரமலானிலோ அல்லாஹ் எப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை உருவாக்கி விட்டான் என்றால், இறை வணக்கங்களின் பக்கம் அனைவருக்கும் கவனம் இருக்கின்றது. எனவே இந்த நாட்களில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். எனவே உங்களிடம் இந்த நன்மைகளுக்கான பழக்கம் ஏற்பட்டு விடும். மேலும் ஒரு மாதத்தில் பழக்கம் ஏற்பட்டு விட்டால் பின்னர் நிரந்தரமாக இதனை வாழ்வின் அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்வீர்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: துன்பங்களின் வேளையில் தனது துஆக்களை அல்லாஹ் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எந்த நபர் விரும்புகின்றாரோ அவர் செழிப்பின்போதும், ஓய்வின் நேரத்திலும் அதிகமாக துஆ செய்ய வேண்டும்.

(திர்மிதி, கிதாபுத் தஃவாத், ஹதீஸ் எண்: 3382)

ஏற்கனவே இது குறித்து ஹதீஸின் அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விஷயங்கள் நமக்கு மிகவும் அவசியமானவையாகும். இவற்றை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நமக்கு அல்லாஹ்வுடன் எப்போதும் தொடர்பு இருக்க வேண்டுமே தவிர கஷ்டம், பிரச்சனை மற்றும் துன்பத்தின் வேளையில் மட்டும் நாம் அல்லாஹ்வின் பக்கம் ஓடக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. மேலும், அப்போது மட்டும் மன்றாடுபவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் உண்மையான நண்பராக ஆகுவதற்கு நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வை நமது வலி ஆக ஆக்கிக் கொள்வதற்கு நாம் நிரந்தரமாக அவனது சன்னிதியில் குனிந்திருக்க வேண்டும். எனவே நான் கூறியது போன்று, நிரந்தர மனப்பான்மையுடன் சாதாரண நாட்களில் கவனம் இருக்க வேண்டும். துன்பம் மற்றும் தேவையின் தருணத்தில் மட்டுமே அல்லாஹ்வை அழைக்கக் கூடாது; மாறாக எப்போதும் அழைக்க வேண்டும் என்ற இந்த ஹதீஸூம் இதனையே கூறுகின்றது.

மற்றோர் அறிவிப்பில் இந்த விஷயமும் வருகின்றது: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: நான் அடியார்களின் எண்ணத்திற்கேற்ப நடந்து கொள்கின்றேன். அடியார் என்னை எப்போது நினைவு கூறுகின்றாரோ அந்த நேரத்தில் நான் அவருடன் இருக்கின்றேன். அவர் என்னை தனது உள்ளத்தில் நினைவுகூறுகின்றார் என்றால் பின்னர் நான் எனது உள்ளத்தில் அவரை நினைவுகூறுவேன். அவர் சபையில் என்னை நினைவுகூறுவார் என்றால் பின்னர் நான் அவரை அதை விட சிறந்த சபையில் நினைவுகூறுவேன். அவன் என் பக்கம் ஓர் அடி வந்தால் நான் அவர் பக்கம் ஒரு முழம் செல்வேன். அவர் என் பக்கம் ஒரு கை அளவு வந்தால் நான் அவர் பக்கம் இரண்டு கை அளவு செல்வேன். அவர் என் பக்கம் நடந்து வந்தால் நான் அவர் பக்கம் ஓடிச் செல்வேன். (புகாரி, கிதாபுத் தவ்ஹீத், ஹதீஸ் எண்: 7405)

எனவே அல்லாஹ்வின் நினைவால் நமது நாவுகளை ஈரமாக வைப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். நமது ஒவ்வோர் அசைவும், ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வை நோக்கி முன்னேற்றக் கூடியதாக இருக்கும் அளவில் முயற்சி இருக்க வேண்டும். அல்லாஹ் நம்மிடம் ஓடி வரும் அளவிலும், நம்மை தனது அன்பின் போர்வையால் போர்த்தி விடும் பொருட்டும், நமது தேவைகளை முழுமைப்படுத்தும் பொருட்டும் நமது ஒவ்வோர் அடியும் நம்மை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். கஷ்டம், செழிப்பு, கடினம், எளிமை ஆகிய எல்லா நிலையிலும் நாம் அல்லாஹ்விற்குரிய அடியார்களாகவே திகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لَا إِلٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ

என்ற இந்த துஆவை துன்னூன் அதாவது ஹஸ்ரத் யூனூஸ் அவர்கள் மீனின் வயிற்றில் செய்திருந்தார்கள்,

மேலும் கூறினார்கள்: எந்தவொரு முஸ்லிம் சோதனையான தருணத்தில் இந்த துஆவை செய்வாரோ அல்லாஹ் இந்த துஆவை நிச்சயம் ஒப்புக் கொள்வான். (திர்மிதி, கிதாபுத் தஃவாத், தின்நூன், ஹதீஸ் 3505)

ஆக, இதுவும் நம் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய பரிவாகும். அதாவது அன்னார் (ஸல்) உடனுக்குடன் நமக்கு இந்த துஆக்களின் பக்கமும் கவனமூட்டி வந்துள்ளார்கள். அதாவது மனிதனிடமிருந்து பலவீனங்கள் நிகழ்ந்து விடுகின்றன. மனிதன் சிலமுறை அல்லாஹ்விற்குரிய உரிமையை நிறைவேற்றுவதில்லை. ஆனால், அல்லாஹ் அதன் பின்னரும் அடியார்களின் மீது கருணை புரிகின்றான். மேலும், அல்லாஹ் சுயமே அவர்களுக்கு இந்த துஆக்களை கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆனில் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு துஆக்கள் ஏன் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன? அல்லாஹ்தானே கற்றுக் கொடுத்துள்ளான்? எதற்காக அவற்றை குறிப்பிட்டுள்ளான்? அல்லாஹ் நபிமார்களின் துஆக்களுடன் ஏன் குறிப்பிட்டுள்ளான்? அல்லாஹ் நமக்கு இந்த துஆக்களை ஏன் கற்றுக் கொடுத்துள்ளான்? என்றால் நாம் இதனை வேண்டினால் அதாவது அல்லாஹ்வால் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ள துஆக்களாக இருப்பதால் அல்லாஹ் அவற்றை ஒப்புக் கொள்வான். ஆனால், விஷயம் இதுவே ஆகும். அதாவது, நாம் முதலில் அதற்குரிய உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்

فَلْيَسْتَجِيبُوا لِي

என்பதற்கான கட்டளையை அல்லாஹ் வழங்கியுள்ளான். அதாவது எனது கூற்றை ஒப்புக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளான். எனது பேச்சை கேளுங்கள்; உங்களது ஈமானை புதுப்பித்துக் கொள்ளுங்கள். எனவே நாம் நமது நிலைகளை சுயமே ஆய்வு செய்து கொள்ள முடியும். அதாவது நாம் எந்த அளவிற்கு அல்லாஹ்வின் கட்டளையை ஏற்கின்றோம் என்று ஆய்வு செய்ய முடியும்.

நான் தற்போது படித்த ஹஸ்ரத் யூனூஸ் (அலை) அவர்களின் துஆ இருக்கின்றதே அதனை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதிலிருந்து ஒரு படிப்பினை கிடைக்கின்றது. அதாவது இறை நியதியை அல்லாஹ் மாற்றி விடுகின்றான். மேலும் அழுகை, மன்றாடல் மற்றும் தானதருமம் செய்தல் போன்ற விஷயங்கள் ஹஸ்ரத் யூனூஸ் (அலை) அவர்களின்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சமுதாயத்திடம் நிகழ்ந்திருந்தன அல்லது அந்த சம்பவத்தில் இடம் பெற்றுள்ள குறிப்பு குற்றத்திற்கு அளிக்கப்பட்ட தண்டனையையும் ரத்து செய்து விடுகின்றது. குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பும் வந்து விட்டது. அதன் பிறகும் கூட துஆ அதனை ரத்து செய்து விட்டது.
(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 238, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் இறை நியதியில் இதனை எழுதி இருக்கின்றான்; மேலும் இது நிகழும் என்று அல்லாஹ்விற்கு தெரியும் எனும்போது, அவ்வாறிருக்க துஆ செய்வதற்கு நமக்கு என்ன அவசியம் இருக்கின்றது? பிறகு, நமக்கு நன்மைகளை மேற்கொள்வதற்கு என்ன அவசியம் உள்ளது? என்று நான் முன்னரும் கூறியது போன்று தற்போது சில மக்கள் கேட்கின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ்வோ இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். மேலும் ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்து, எனது தீர்ப்புகளான இறை நியதியின் முடிவுகளை நான் மாற்றி விடுகின்றேன் என்று கூறுகின்றான். உங்களிடம் அழுகையும், மன்றாடலும் இருந்து, இறைவனுடன் உங்களுக்கு சரியான தொடர்பு இருக்குமென்றால், மேலும் நீங்கள் நன்மைகளை செய்ய தொடங்கி விட்டால் மேலும் தீமைகளிலிருந்து விலகத் தொடங்கி விட்டால் மேலும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் வீழ்ந்து அழுது புலம்பினால் பின்னர் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த மக்கள் துன்பம் இறங்குவதற்கு முன்னர் துஆக்கள் செய்கின்றார்களோ, மேலும் இஸ்திஃக்ஃபார் செய்கின்றார்களோ மேலும் தான தருமங்கள் செய்கின்றார்களோ அல்லாஹ் அவர்களின் மீது கருணை புரிகின்றான். மேலும் இறை தண்டனையில் இருந்து அவர்களை காப்பாற்றுகின்றான் என்பதை (உங்களுக்கு) நான் புரிய வைக்க விரும்புகின்றேன்.

அன்னார் (அலை) இதனையே கூறியுள்ளார்கள். அதாவது ஆபத்துகள் வந்து விட்ட போதும், அந்நிலையிலும் கூட அல்லாஹ் எவ்வளவு கருணையாளன் என்றால், அவன் அப்போதும் கூட உங்களை காப்பாற்றி விடுகின்றான். உங்களது துஆக்கள் உண்மையில் உண்மையான உள்ளத்துடன் செய்யப்பட்ட துஆக்களாக இருக்கும் என்றால் மேலும் உங்களது இஸ்திஃக்ஃபார் உண்மையானதாக இருக்கும் என்றால் (அவன் உங்களை அந்நிலையிலும் கூட காப்பாற்றிவிடுவான்).

கூறினார்கள்: எனது இந்தக் கூற்றுகளை கதைகளைப் போன்று கேட்காதீர்கள். நான் அறிவுரையாக கூறுகின்றேன்: உங்களது நிலைமைகளை சீர்தூக்கிப் பாருங்கள்! நீங்களும் (துஆவில் ஈடுபடுங்கள்) ;உங்களது நண்பர்களையும் துஆவில் ஈடுபடும்படி கூறுங்கள். **இஸ்திஃக்ஃபார் இறை தண்டனை மற்றும் கடினமான துன்பங்களிலிருந்து பாதுகாக்கும் பணியை செய்கின்றது. இஸ்திஃக்ஃபார் மிக அதிகமாக செய்யுங்கள். இது கேடயமாகும்.**

அதாவது, இது உங்களுக்கான கேடயமாகும். இஸ்திஃக்ஃபார் செய்வீர்கள் என்றால் அல்லாஹ் உங்களை காப்பாற்றுவான். கடந்த நாட்களில் நான் (சில) துஆக்களை செய்யும்படி கூறியிருந்தேன். அதில் இஸ்திஃக்ஃபார் பக்கமும் கவனமூட்டப்பட்டிருந்தது. இஸ்திஃக்ஃபார் ஒரு கேடயமாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

مَا كَانَ اللّٰهُ مُعَذِّبَهُمْ وَهُمْ يَسْتَغْفِرُوْنَ

(அல் அன்ஃபால்: 34)

நீங்கள் பாவமன்னிப்பு வேண்டி கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ் உங்களுக்கு எப்படி தண்டனை அளிப்பான்? எந்த மக்கள் பாவமன்னிப்பு கோரிக் கொண்டிருக்கின்றனரோ அவர்களுக்கு அல்லாஹ் தண்டனை அளிப்பதில்லை. உண்மையான பாவமன்னிப்பு வேண்ட வேண்டும். எனவே அன்னார் (அலை) கூறினார்கள்:

இந்த இறைத் தண்டனையில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால் பின்னர் அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 207, 1984-ம் ஆண்டு பதிப்பு)

ஆக, இந்த துஆவில் அல்லாஹ் இந்த விஷயத்தையே கூறியுள்ளான். அதாவது அவர்கள் பாவமன்னிப்பு வேண்டி கொண்டிருக்கும்போது அல்லாஹ் அவர்களை தண்டனை வழங்கக் கூடியவன் அல்லன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் இதற்கான விளக்கத்தில் இவ்வாறு கூறினார்கள்:

இந்த இறைத் தண்டனையிலிருந்து நீங்கள் தப்பிக்க விரும்பினால் பின்னர் அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்.

அடுத்து ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

அல்லாஹ் மிகவும் வெட்க உணர்வு கொண்டவன் ஆவான். மிகவும் கண்ணியமிக்கவனும், வள்ளலும் ஆவான். அடியார் அவனது சன்னிதானத்தில் இரண்டு கைகளையும் உயர்த்தும்போது,அவரை வெறும் கையுடனும், தோல்வியுற்றவாறும் திரும்ப அனுப்புவதில் இருந்து அவன் நாணம் கொள்கின்றான்.
(திர்மிதி, கிதாபுத் தஃவாத், ஹதீஸ் எண்: 3556)

அதாவது உண்மையான உள்ளத்துடன் வேண்டப்பட்ட துஆவை அவன் மறுப்பதில்லை. மாறாக, அதனை அவன் ஒப்புக் கொண்டு விடுகின்றான். எனவே அல்லாஹ்விடம் நாம் என்ன துஆக்களை வேண்டினாலும் அவற்றை உண்மையான உள்ளத்துடன் வேண்ட வேண்டும். கடந்த கால பாவங்களுக்கும், தவறுகளுக்கும் நாம் மன்னிப்பு கோர வேண்டும். மேலும் எதிர்காலத்தில் நன்மைகளில் நிலைத்திருப்பதற்கான நற்பேறை அல்லாஹ்டம் வேண்ட வேண்டும். மேலும் பின்னர் அதில் நிலைத்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலானிலும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆக்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். மேலும் ரமலானிற்கு பிறகும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். பின்னர் பாருங்கள்; அல்லாஹ் எப்படி ஓடோடி நம் பக்கம் வருகின்றான் ; நம்மை தனது மடியில் எடுத்துக் கொள்கின்றான் என்று பாருங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறு அல்லாஹ்வின் வேதங்களில் நல்ல மனிதருக்கும் கெட்ட மனிதனுக்கும் இடையில் வேறுபடுத்தி கூறப்பட்டுள்ளதோ மேலும் அவர்களுக்கு தனித்தனியான அந்தஸ்து குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அதேபோன்று அல்லாஹ்வின் இயற்கைச் சட்டத்தில் அந்த இரு மனிதர்களுக்கு இடையிலும் வித்தியாசம் உள்ளது. அவர்களில் ஒருவர், இறைவனை நன்மையின் ஊற்றாக கருதி தனது நிலையின் மூலமாகவும், கூற்றின் மூலமாகவும் துஆக்களால் அவனிடம் ஆற்றலையும், உதவிகளையும் வேண்டுகின்றார். மற்றொருவர் தனது திட்டங்கள் மற்றும் ஆற்றல் மீது நம்பிக்கை வைத்து துஆவை ஏளனத்திற்குரியதாக கருதுகின்றார். இன்னும் கூறப்போனால், இறைவனிடமிருந்து கவனமற்ற நிலையிலும், ஆணவம் மிகுந்த நிலையிலும் இருக்கின்றார். எந்த நபர் கஷ்டம் மற்றும் துன்பத்தின் வேளையில் இறைவனிடம் துஆ செய்கின்றாரோ மேலும் அவனிடம் தீர்வை வேண்டுகின்றாரோ அவர் நிச்சயம் துஆவை உச்சம் வரை கொண்டு சேர்க்க வேண்டும். இது நிபந்தனையாகும்.

அதாவது, துஆவை (அதன்) உச்சம் வரை கொண்டு சேர்க்க வேண்டும் என்பது நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது.

துஆ உச்சத்தை தொட்டு விடும்போது, அத்தகைய நபர் இறைவனிடமிருந்து மன அமைதியையும், உண்மையான மகிழ்ச்சியின் நிலையையும் பெற்றுக் கொள்கின்றார். ஒருவேளை அவருக்கு அவரது விருப்பம் நிறைவேறாவிட்டாலும், அப்பொழுதும் வேறு ஏதாவது வகையான மன ஆறுதலும், மன அமைதியும் இறைவன் புறமிருந்து அவருக்கு வழங்கப்படுகின்றது.

மேலும் கூறினார்கள்:

அவர் ஒருபோதும், ஒருபோதும் தோல்வியடைந்தவராக இருக்க மாட்டார்; வெற்றி மட்டுமின்றி அவரது ஈமானிய வலிமை முன்னேற்றம் அடைகின்றது. மேலும் நம்பிக்கை அதிகரித்து விடுகின்றது.
(அய்யாமே ஸுல்ஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 14, பக்கம் 236 - 237)

தற்போது இந்த விஷயங்களை பார்க்க வேண்டும். அதாவது நாம் அல்லாஹ்வின் அருட்களை பெற வேண்டும்; அல்லாஹ்வோ சுயமே நல்லவர் மற்றும் தீயவருக்கிடையில் இந்த வித்தியாசத்தையே வைத்துள்ளான். எவர் நல்லவரோ அவர் இறைவனை நன்மையின் ஊற்றாக கருதுகின்றார். ஒவ்வொரு நன்மையின் ஊற்றாக இறைவனுடைய இருப்பையே அவர் கருதுகின்றார். ஒவ்வொரு நன்மையையும் அல்லாஹ்விடம் இருந்து பெற வேண்டும் என்று அவர் கருதுகின்றார். மேலும் அவனிடமிருந்து ஆற்றலை வேண்டுகின்றார் எனில் இவர் நிச்சயமாக நம்பிக்கையாளர் ஆவார். ஆணவம் கொண்ட ஒருவர் இது போன்ற நிலையை (தம்மிடம்) உருவாக்கிக் கொள்வதில்லை. நான் உலகியல் காரணிகளை பயன்படுத்தி ஏராளமானவற்றை பெற்றுக் கொள்வேன் என்று அவர் கருதுகின்றார். அது போன்ற நிலைமை இருக்கும்போதோ பின்னர் அல்லாஹ்வும் அது போன்ற அடியார்களை ஏதாவது ஒரு நேரத்தில் பிடிப்பான்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அறிவிப்பில் வருகின்றது. அன்னார் (ஸல்) ஒரு சபையில் இருந்து எழுந்து செல்லும் போதெல்லாம் அன்னார் (ஸல்) துஆ செய்து வந்தார்கள்:

எனது அல்லாஹ்வே! நீ உனது அச்சத்தை வழங்குவாயாக! மேலும் அதனை நீ எங்களுக்கும் எங்களது பாவங்களுக்கும் இடையில் தடையாக ஆக்கிவிடுவாயாக! மேலும் எங்களிடமிருந்து உனக்கு கீழ்ப்படியாமை வெளிப்படாமல் இருக்க வேண்டும். எங்களுக்கு கட்டுப்படுதலின் எப்படிப்பட்ட அந்தஸ்தை வழங்க வேண்டும் என்றால் அதன் காரணமாக நீ எங்களை சொர்க்கத்தில் சென்றடைய செய்து விட வேண்டும். மேலும், எவ்வளவு நம்பிக்கையை வழங்க வேண்டும் என்றால், அதன் மூலம் உலகத்தின் துன்பங்களை நீ எங்களுக்கு எளிதாக்கிவிட வேண்டும்.

அல்லாஹ்வே! எனது அல்லாஹ்வே!, எங்களுக்கு எங்களது கண்களிலிருந்தும், எங்களது ஆற்றல்களிலிருந்தும் வாழ்நாள் முழுவதும் பயனடைவதற்கான நற்பேறை வழங்குவாயாக! மேலும் எங்களை அதன் நன்மைகளுக்கு வாரிசாக்குவாயாக! மேலும் எவர் எங்கள் மீது அநீதியிழைப்பாரோ அவரை நீ எங்கள் சார்பாக பழிவாங்குவாயாக! மேலும் எவர் எம்முடன் பகைமை கொள்வாரோ அவருக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி புரிவாயாக! மேலும், மார்க்கத்தில் எந்தவொரு சோதனையும் வருவதிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! மேலும், உலகம் எங்களது மாபெரும் துன்பம் மற்றும் கவலைக்குரிய விஷயமாக இருக்காத வண்ணம் செய்வாயாக! மேலும் எங்களது அறிவு உலக அளவில் மட்டுமே இருக்கக் கூடாது; எங்களது கவலைகளும், எங்களது துன்பங்களும் உலகத்தை குறித்து மட்டுமானதாகவே இருக்கக் கூடாது. மேலும், கூறினார்கள்:

**(இறைவா!) எங்கள் மீது கருணை காட்டாத நபரையும், எங்களுடன் பரிவுடன் நடந்து கொள்ளாத நபரையும் நீ எங்களின் ஆட்சியாளராக ஆக்காதிருப்பாயாக!**

(திர்மிதி, கிதாபுத் தஃவாத், ஹதீஸ் 3502)

எனவே இந்த துஆவை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு வேதனையுடன் இந்த துஆவை செய்துள்ளார்கள்! எல்லா விஷயங்களையும் உள்ளடக்கிய மிகவும் சுருக்கமான துஆ ஆகும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

எனவே நாம் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ கேட்க வேண்டும். அதாவது, நமது அனைத்து ஆற்றல்கள், நமது உறுப்புகள், நமது கண், காது, மூக்கு, நாவு, மூளை, உள்ளம் என எல்லாவற்றிற்கும் அல்லாஹ் நன்மை பயக்கக் கூடியவனாக இருப்பானாக! என்று அல்லாஹ்விடம் நாம் துஆ செய்ய வேண்டும். மேலும் நமது ஒவ்வோர் உடல் உறுப்பும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக் கூடியதாக ஆகிவிட வேண்டும். மேலும் நாம் அவனது அருட்கொடைகளுக்கு வாரிசுகளாகிவிடவேண்டும். அல்லாஹ்தான் நம்மை அநீதியாளர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்.

மேலும் இன்றைய நாட்களில் உலகின் சில இடங்களில் நிலவும் சூழல்கள் இருக்கின்றன. பாகிஸ்தானிலும், பங்களாதேசத்திலும், மற்ற பகுதிகளிலும் வேறு இடங்களிலும், நாடுகளிலும் அல்ஜீரியா போன்ற நாடுகளிலும் அல்லது ஆஃப்ரிக்காவின் மற்ற இடங்களிலும் சில தீய வகையான பிரிவினர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் அல்லது அந்தக் கூட்டத்தினரின் சார்பாக சில தாக்குதல்களும் நிகழ்கின்றன. இந்தப் பிரிவினர் எப்படிப்பட்ட பிரிவினர் என்றால், இவர்களைக் கண்டு அரசாங்கங்களும் அஞ்சி அவர்களின் கூற்றை ஒப்புக் கொண்டு விடுகின்றன.

எனவே அல்லாஹ்விடம் இந்த துஆவை செய்ய வேண்டும். அதாவது, எங்களுக்கு அநீதியாளர்களிடம் இருந்து இரட்சிப்பு வழங்குவாயாக! மேலும் அவர்களை பழிவாங்குவாயாக! மேலும் எவர்கள் எங்களுடன் பகைமை கொள்கின்றார்களோ அவர்களுக்கு எதிராக நீயே எங்களுக்கு உதவி புரிவாயாக!

இவ்வாறு நாம் ரமலானில் துஆ செய்தால் பின்னர் அல்லாஹ் ஒரு மகத்தான புரட்சியை உருவாக்கி விடுவான். பின்னர் நாம் பார்ப்போம்; அவர் பாகிஸ்தானிய மவ்லவியாக இருக்கட்டும்; அல்லது வலிமை படைத்த மனிதனாக இருக்கட்டும்; அல்லது அரசாங்கத்தின் அதிகாரம் படைத்த ஒருவராக இருக்கட்டும்; அவரால் நமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. நாம் தூயவர்களாக திகழ்ந்து அல்லாஹ்வின் பக்கம் குனிந்தால் பின்னர் அல்லாஹ் நமது உதவிக்காக வருவான். வலி மற்றும் நண்பனுக்குரிய உரிமையை நிறைவேற்றுவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அருட்களை பெறுவதற்கான மிகவும் நெருக்கமான வழிமுறை துஆ ஆகும். மேலும் முழுமையான துஆவிற்குரிய தேட்டங்கள் இவையாகும். அதாவது அதில் உருக்கம் இருக்க வேண்டும்; மேலும் அதில் வேதனை இருக்க வேண்டும்; பரிதவிப்பு இருக்க வேண்டும். ஒரு தாழ்மை குணமும், ஒரு நிம்மதியின்மையும் இருக்க வேண்டும். வேதனை உருவாகி விட வேண்டும். கூறினார்கள்:

துஆவில் பணிவும், வேதனையும்,மன்றாடலும் நிறைந்திருக்கும் என்றால் பின்னர் அது அல்லாஹ்வின் அருட்களை ஈர்த்து வருகின்றது. மேலும் ஒப்புக் கொள்ளப்பட்டு அசல் நோக்கத்தை அடைந்து விடுகின்றது. ஆனால், கடினம் என்னவென்றால், இதுவும் அல்லாஹ்வின் அருளின்றி பெற்றுக் கொள்ள முடியாது.

அடுத்து, இதற்கான சிகிச்சை இதுவேயாகும். அதாவது, துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். எப்படிப்பட்ட மன சோர்வும், ஆர்வமின்மையும் ஏற்பட்டாலும் சரி! அவர் திருப்தி அடைந்து விடக் கூடாது.

துஆவில் இன்பம் கிடைத்தாலும்; கிடைக்கவில்லை என்றாலும் சரியே! துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும். எனக்கு உன்னை தவிர வேறு எவருமே கிடையாது என்று துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

நாங்கள் வேறு எங்கும் செல்ல மாட்டோம் என்றே நாம் அல்லாஹ்விடம் கூற வேண்டும். நான் வேறு எவரிடமும் செல்ல மாட்டேன்; செல்லவும் முடியாது என்று கூற வேண்டும். எனவே நான் உன்னிடத்திலேயே அமர்ந்து விடுகின்றேன். நீ எனது கூற்றை ஏற்காத வரை எனது உள்ளம் நிம்மதியடையாது என்று கூறி துஆ செய்ய வேண்டும். அன்னார் (அலை) கூறினார்கள்:

செயற்கையாக அழுதாலும் சரியே! ஆனால், இதே போன்று துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். பின்னர் எப்படிப்பட்ட நிலை உருவாகி விடும் என்றால், ஒரு நேரத்தில் அந்த செயற்கையான அழுகை என்பது உண்மையான துஆவின் வடிவத்தை பெற்று விடும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அசல் மற்றும் உண்மையான துஆவை செய்வதற்கும் கூட துஆவிற்கான தேவையே இருக்கின்றது.

கூறினார்கள்:

ஏராளமான மக்கள் துஆ செய்கின்றனர். அவர்களது உள்ளம் திருப்தியடைந்து விடுகின்றது. மேலும், எதுவும் ஆகவில்லை என்று அவர்கள் கூறிவிடுன்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

எமது அறிவுரை என்னவென்றால், அந்த மண்ணை சல்லடை செய்வதிலேயே அருள் இருக்கின்றது. அந்த மண்ணை அரிப்பதிலேயே அருள் இருக்கின்றது. ஏனெனில், மகத்தான நோக்கம் இதன் மூலமே நிறைவேறுகின்றது. என்ன நோக்கத்தை பெற வேண்டுமோ, எந்த முத்துக்களைப் பெற வேண்டுமோ அவை இதன் மூலமே வெளியாகின்றன. தற்போது தங்கத்தை (பிரித்து) எடுக்கக் கூடிய மக்கள் அறிவர்.

எந்த மக்கள் பழமையான வழிமுறைகளில் (தங்கத்தைப்) பெறக் கூடியர்களாக இருக்கின்றனரோ அவர்கள் நதிகளின் கரைகளில் அமர்ந்து விடுகின்றனர். மேலும் அரிப்புகளால் சல்லடை செய்து கொண்டே செல்கின்றனர். பற்பல நாட்களில் அதில் ஈடுபட்டு இருக்கின்றனர். பல கிலோ இன்னும் கூறப்போனால் பல டன் மண்ணை சல்லடைப் போட்டு அரிக்கின்றனர். அதன் பிறகு சிறிதளவு தங்கம் அது ஒரு தோலோ ( அதாவது 11 கிராம் அளவு) அல்லது அதை விட குறைவாக அவர்களுக்கு கிடைக்கின்றது. அதிலேயே அவர்கள் மகிழ்ச்சியடைந்து விடுகின்றனர்.

ஆக, இவ்வாறு அல்லாஹ்விற்கு முன்னால் குனிந்து கொண்டிருந்தால் பின்னர் பரக்கத் கிடைக்கும்.

கூறினார்கள்: ஏனெனில், எல்லா நோக்கமும் அதிலிருந்து வெளிப்படுகின்றது. மேலும் ஒருநாள் வந்து விடுகின்றது. அப்போது அவரது உள்ளம் நாவுடன் ஒருமித்து விடுகின்றது. பின்னர் அந்த பணிவும், உருக்கமும் மேலும் துஆவிற்கு தேவையான விஷயங்களும் சுயமாகவே உருவாகி விடுகின்றன.

**துஆவில் உருக்கத்தை உருவாக்குவது மிகவும் அவசியமாகும்.**

கூறினார்கள்: (துஆவில்) எவ்வளவுதான் கவனமின்மை இருந்தாலும், பொறுமையின்மை இருந்தாலும் எவர் இரவில் எழுகின்றாரோ ; வேக வேகமாக கூட தொழுதாலும், அப்போதும் கூட அவர் அந்த நிலையிலும்,

**இறைவா! உள்ளம் உனது கட்டுப்பாட்டிலும், ஆதிக்கத்திலுமேயே இருக்கின்றது; நீ அதனை சுத்தம் செய்வாயாக!**

என்று துஆ செய்கின்றார் என்றால், கடும் இறுக்கத்தின் நிலையில் அல்லாஹ்விடம் செழுமையை நாடினால் பின்னர் அவருடைய அந்த இறுக்கத்திலிருந்து செழுமை வெளிப்பட்டு வந்து விடும். ஆர்வமற்றத் தன்மை என்ற

அந்த நிலையிலும் கூட அல்லாஹ் எப்படிப்பட்ட நிலையை உருவாக்கி விடுவான் என்றால் அந்நிலையில் கவனம் பிறக்கத் துவங்கி விடும்.மேலும் அந்த உள்ளத்தின் தடைகள் அகன்று விடும். மேலும் உருக்கம் உருவாகி விடும். மன இறுக்கத்தின் நிலை என்பது நீங்கி விடும். மேலும் துஆ செய்வதற்கான அவசியத்தின் பக்கம் கவனம் மட்டும் உருவாகாது. மாறாக, உள்ளத்தால் துஆக்கள் வெளிப்பட துவங்கி விடும்.

மேலும் கூறினார்கள்: இது எப்படிப்பட்ட நேரமாக இருக்கின்றது என்றால், அது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நேரமாக அழைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நேரம் வந்து விட்டது என்பதை புரிந்து கொள்ளுங்கள். அந்நேரத்தில் இறை சன்னிதானத்தில் ஆன்மா (உருகி) ஓடுவதையும், ஒரு துளியைப் போன்று இருப்பதையும், அது விண்ணிலிருந்து கீழ் நோக்கி விழுவதையும் அவர் காண்பார்.

எனவே இது போன்ற நிலையில் உருக்கம் உருவாகி விடும்போது, பின்னர் மனிதன் நிரந்தரமாக ஈடுபட்டு வரும்போது, பின்னர் மீண்டும் அல்லாஹ் உருக்கத்தை உருவாக்கிவிடுகின்றான். பின்னர் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதலும் வெளிப்பட துவங்கி விடுகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 6. பக்கம் 93 - 94, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எந்த இறைவனின் பக்கம் நாம் அழைக்கின்றோமோ அவன் மிகவும் கண்ணிய மிக்கவனும், மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவனும், நாணம் கொண்டவனும், உண்மையாளனும், வறியவர்கள் மீது கருணை காட்டக் கூடியவனும் ஆவான். எனவே நீங்களும் நன்றியுடையவர்களாக ஆகிவிடுங்கள்.

நீங்கள் நன்றியுடையவர்களாக ஆகிவிடுங்கள்; மேலும் முழுமையான உண்மையுடனும், பற்றுதலுடனும் துஆ செய்யுங்கள்; அவன் உங்கள் மீது கருணை புரிவான். உலகின் ஆரவாரங்களிலிருந்து தனித்து சென்று விடுங்கள். மேலும், மன இச்சைகளுக்கும், சண்டைகளுக்கும் மார்க்கத்தின் வடிவத்தை கொடுக்காதீர்கள். இறைவனுக்காக தோல்வியை மேற்கொள்ளுங்கள் . மேலும் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுங்கள்; அவ்வாறு செய்தால் பெரும் வெற்றிகளுக்கு நீங்கள் வாரிசுகள் ஆகிவிடுவீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

சின்னச் சின்ன விஷயங்களில், உலகியல் விஷயங்களில் தம்மை தாமே அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக அந்த விஷயங்களிலிருந்து தப்பிக்க வேண்டும். அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். உங்களது இரத்த உறவுகளின் பக்கம் கவனம் செலுத்துவதற்கான தேவை இருக்கும். உங்களது நண்பர்களின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அப்போதுதான் அல்லாஹ்வின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனம் ஏற்படும். பின்னர் துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான அடையாளத்தையும் மனிதன் காண்பான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: துஆவின் முதலாவது அருட்கொடை இதுவாகும். அதாவது, மனிதனிடத்தில் தூய மாறுதல் ஏற்பட்டு விடுகின்றது.துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கு தேவையான மிகவும் பெரிய விஷயம் தூய மாறுதல் உருவாகுதல் ஆகும். ரமலானில் மட்டும் தூய மாற்றம் என்பது பிறக்காது. மாறாக, நிரந்தரமாக தூய மாறுதல் பிறக்கின்றது. அப்போது துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான அடையாளம் மனிதன் மீது வெளிப்படுகின்றது.

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த மாற்றத்தால் இறைவனும் தனது பண்பில் மாறுதலை செய்து கொள்கின்றான். மேலும், அவனது இறைப் பண்புகளோ மாறுதலுக்கு அப்பாற்பட்டதாகும். ஆனால், மாறுதலடைந்த நபருக்கு அதன் ஒரு தனித்துவமான காட்சிப்பாடு நிகழ்கின்றது. அல்லாஹ்வின் இறைப் பண்புகள் மாறிவிடுகின்றன என்பதன்று. மாறாக, விஷயம் இதுவாகும்; அதாவது, இறைவனுடைய கருணை மற்றும் அருட்கொடைக்கான பண்புகள் இருக்கின்றனவே அவற்றை செயல்பட வைக்கின்றான். அதிலிருந்து மனிதனை பயனடையச் செய்கின்றான்.

கூறினார்கள்: இந்த விஷயங்களை உலகம் அறிந்திருக்கவில்லை. மனிதனிடம் தோன்றும் அந்த நிலையில், அதாவது அவர் இறைவனுக்காக ஆகிவிடும்போது பின்னர் இறைவன் வேறொருவனாக இருக்கின்றான் என்று தோன்றும். உண்மையில் அப்படி வேறு எந்த இறைவனும் இல்லை. மாறாக புதிய காட்சிப்பாடு புதிய வடிவில் அவனுக்கு வெளிப்படுகின்றது. அப்போது அந்த சிறப்பான காட்சிப்பாட்டின் மகிமையினால் அந்த மாறுதலுக்கு ஆளான நபரிடத்தில் அது எப்படி பணி செய்கின்து என்றால், மற்றவர்களுக்காக அது அவ்வாறு செய்வதில்லை.

(லெக்சர் ஸியால்கோட், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20. பக்கம் 223)

இது இறை நியதியாகும்; இதுவோ இப்படித்தான் நிகழும் எனும்போது, துஆ எவ்வாறு செய்ய முடியும்? துஆ எவ்வாறு கபூல் ஆகும்? என்று சில மக்கள் கூறுகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நல்லெண்ணத்துடன் துஆ செய்யப்பட்டால் பின்னர் அல்லாஹ் இறை நியதியை மாற்றி விடுகின்றான்.அல்லாஹ் தனது தீர்ப்புகளை மாற்றி விடுகின்றான். தீய முடிவு நல்ல முடிவில் மாறி விடுகின்றது.

எனவே துஆக்களின் பக்கம் அதிகம் கவனம் செலுத்துவதற்கு அவசியம் உள்ளது. மேலும் இந்த ரமலானை எப்படிப்பட்ட ரமலானாக ஆக்க வேண்டும் என்றால், அது துஆ ஒப்புக் கொள்ளப்படுதலுக்கான ரமலானாக இருக்க வேண்டும். உங்களிடத்தில் தூய மாறுதலை உருவாக்குதற்காக ரமலான் வந்தது. பின்னர் நிரந்தரமாக இந்த தூய மாறுதல்கள் நமது வாழ்வின் அங்கமாக ஆகிவிட வேண்டும். மேலும் நமக்கு அல்லாஹ் எதிரிகளிடமிருந்து, அனைத்து எதிர்ப்பாளர்களிடமிருந்தும் இரட்சிப்பை வழங்குவானாக! அனைத்து அநீதியாளர்களிடமிருந்து நமக்கு இரட்சிப்பை வாங்குவானாக!

நாம் இந்த ரமலானை நிரந்தரமாக நமது வாழ்க்கையில் தூய மாறுதல்களை உருவாக்குவதற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளவேண்டும். மேலும் அடுத்து, இந்த தூய மாறுதல் நமது வாழ்க்கையின் நிரந்த அங்கமாக ஆகிவிட வேண்டும்.

அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

## முதல் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத் ..)

மிகவும் விசாலமானதாகும். மனிதன் விரும்பினால், பின்னர் இந்த போலியான காரணத்தின் அடிப்படையில் தனது வாழ்நாள் முழுவதும் அமர்ந்தே தொழுது வந்து கொண்டிருப்பான். மேலும் ரமலானின் நோன்புகளை முற்றிலும் நோற்க மாட்டான்.

ஆனால், இறைவனோ அவரது எண்ணத்தையும் அறிந்திருக்கின்றான். எவர் உள்ளத்தில் உண்மையையும், தூய்மையையும் கொண்டிருப்பாரோ அவரது உள்ளத்தில் வேதனை உள்ளது என்பதை இறைவன் அறிகின்றான். மேலும், இறைவன் அவருக்கு அதிகமான நற்கூலியையும் வழங்குகின்றான். ஏனெனில், உள்ளத்தின் வேதனை என்பது ஒரு மதிக்கத்தக்க விஷயம் ஆகும். போலியான காரணங்களை தேடும் மனிதன் சுய விளக்கங்களை சார்ந்திருக்கின்றான். ஆனால், இறைவனின் பார்வையில் இந்த விளக்கங்கள் ஒரு பொருட்டே கிடையாது.

நான் ஆறு மாத காலம் நோன்பு நோற்றிருந்தபோது, ஒருமுறை நபிமார்களின் கூட்டம் ஒன்று என்னை சந்தித்தது. மேலும், நீர் உமது நஃப்ஸை இந்த அளவிற்கு கடினத்தில் ஆழ்த்திக் கொள்கின்றீர்; இதிலிருந்து வெளியேறுக! என்று அவர்கள் கூறினர். இதே போன்று மனிதன் தன்னை தானே இறைவனுக்காக கடினத்தில் ஆழத்திக் கொள்கின்றபோது, பின்னர் நீ ஏன் கடினத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றாய்? என்று இறைவன் தாய், தந்தையைப் போன்று கருணையுடன் அந்த நபரிடம் கூறுவான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 563, காதியான் பதிப்பு 2003-ம் ஆண்டு)

* * * * * * * *

## 130-வது காதியான் ஆண்டு மாநாடு 2025

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 130-வது காதியான் ஆண்டு மாநாட்டை 2025-ம் ஆண்டு, டிசம்பர் 26,27, 28 ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்கள் செய்வதுடன் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு எண்ணம் கொண்டு ஆயத்தமாக துவங்கிவிடுங்கள்.

இறைவனுக்காக நடைபெறும் இந்த ஆண்டு மாநாட்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகமாக கலந்து கொண்டு பயன்பெறுவதற்கு அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக! இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களுக்கு அல்லாஹ் நம் அனைவரையும் வாரிசாக்குவானாக! ஆமீன்! இதே போன்று ஆண்டு மாநாடு எல்லா ரீதியிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் அமைய மேலும் நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைய தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

**அமெரிக்க சுற்றுப் பயணம் - 2013**

அஹ்மதிகள் அமைதியை விரும்பக் கூடிய குடிமக்கள் ஆவர்; மேலும் அவர்கள் சட்டத்தை பேணி நடக்கக் கூடியவர்கள் ஆவர் மேலும் நாங்கள் எதனை கூறுகின்றோமோ அதனையே செய்யக் கூடியவர்கள் ஆவோம்

இறுதி காலத்தில் முஸ்லிம்களுக்கு மார்க்கப் போர் புரிவதற்கான அவசியம் இல்லை. மாறாக, இஸ்லாத்தின் அமைதி மற்றும் சாந்தி நிறைந்த போதனையை முன்வைப்பதற்கான அவசியம் இருக்கின்றது. மேலும், நாங்கள் எல்லா இடத்திலும், எல்லா மட்டத்திலும், இந்த அமைதியின் போதனையை முன் வைத்து வருகின்றோம்

உண்மையான இஸ்லாம் அமைதிக்கான தூதுச் செய்தியை வழங்குகின்றது. இஸ்லாம் என்ற சொல்லின் பொருளே அமைதி மற்றும் சாந்தி என்பதாகும்

ஒரு நாடு தவறிழைக்கும்போது, அது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றது என்றால், மேலும் தனது குடிமக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை கொடுக்கவில்லை என்றால், பின்னர் அந்த நாட்டை அநீதியிழைப்பதிலிருந்து தடுப்பதற்கு அண்டை நாடுகள் அதற்கு எதிராக நிற்க வேண்டும். மேலும், அநீதியை நிறுத்துமாறும், அமைதியை நிலைநாட்டுமாறும் அதனை நிர்பந்திக்க வேண்டும்

இறுதி காலத்தில் ஒரு நபர் தோன்றுவார்; அவர் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவார்; மேலும், அவர் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் சரியான போதனைகளை முன்வைப்பார் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாகும். அதற்கு ஏற்ப எங்களது கொள்கையின் அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்புக்கு ஏற்ப தோன்றி விட்டார்கள்

முஸ்லிம்களின் புறமிருந்து இழைக்கப்படும் இந்த அநீதிகளுக்கு மத்தியிலும் நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றோம். ஆஃப்ரிக்காவிலும், ஏனைய நாடுகளிலும் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒவ்வோர் ஆண்டும் அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர்

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்

**லாஸ் ஏஞ்சல்ஸ்,**

**அமெரிக்காவில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் சுருக்கமான அறிக்கை**

**(அறிக்கை தயாரிப்பு - அப்துல் மாஜித் தாஹிர், அடிஷனல் வகீலுத் தப்ஷீர், லண்டன்)**

**மே 8 புதன்கிழமை - 2013**

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் ஹமீதிற்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

காலையில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அலுவலக கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை படித்து உரிய வழிகாட்டலை வழங்கினார்கள்.

**Los Angeles Times பத்திரிகையின் நிருபருடன் நேர்காணல்**

இன்று நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வெஸ்ட் கோஸ்ட்டின் மிகப் பெரிய பத்திரிகையான Los Angeles Times- பத்திரிகையின் ஒரு நிருபரான Carrol J Williams என்பவர் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் நேர்காணல் செய்வதற்காக வந்திருந்தார். அந்தப் பத்திரிகையை படிப்பவர்களின் எண்ணிக்கை பல மில்லியன் ஆகும்.

பைத்துல் ஹமீது பள்ளிவாசலின் நூலகத்தில் நேர்காணலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 9.50 மணியளவில் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் நேர்காணல் துவங்கியது.

கேள்வி: சில முஸ்லிம்களின் தரப்பிலிருந்து நிகழும் வன்முறை மற்றும் தீவிரவாத சம்பவங்களின் காரணமாக இஸ்லாத்தைக் குறித்து மிகவும் தீய தாக்கம் உருவாகியிருக்கின்றது; அந்நிலையில் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை உங்களால் எப்படி பரப்ப முடியும்? மேலும் நீங்கள் இந்த தாக்கத்தை அகற்றுவதற்காக என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று அந்த நிருபர் கேட்டார்.

பதில்: இதற்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உண்மையான இஸ்லாம் அமைதிக்கான தூதுச் செய்தியை வழங்குகின்றது. இஸ்லாம் என்ற சொல்லின் பொருளே அமைதி மற்றும் சாந்தி என்பதாகும். ஹுஸுர் அன்வர் கூறினார்கள்:

எங்களுடைய கொள்கை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இந்த இறுதிக் காலத்தில் இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் தோன்ற இருந்தார்; அவர் முஸ்லிம்களை மட்டும் அல்ல ; மாறாக, முழு உலகையும் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் சரியான போதனைகளால் ஒளிமயமாக்க வேண்டிய தேவை இருந்தது. இஸ்லாத்தின் அமைதி மற்றும் சமாதானம் நிறைந்த போதனைகளை உலகிற்கு எட்ட வைக்க வேண்டியது இருந்தது. ஆக, இந்த இறுதி காலத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப் காதியானி (அலை) அவர்கள் இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் வருகை தந்தள்ளார்கள். மேலும், அன்னார் (அலை) முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அழகிய போதனைகளை எல்லா மார்க்கத்தினர் வரையும் எட்ட வைத்தார்கள்.

ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாத்தின் துவக்க காலத்தில் ஏன் போர்கள் புரியப்பட்டன? என்று கேட்கக் கூடும். அது தொடர்பாக நினைவிற் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் முதலில் தாக்குதல் நடத்தவில்லை. முஸ்லிம்கள் மீது அநீதிகள் இழைக்கப்பட்டன. அப்போது அவர்களுக்கு தற்காப்புப் போர் புரிய நேரிட்டது. மேலும் அந்தப் போர்களும் கூட இதற்காக மட்டுமே புரியப்பட்டன. ஏனெனில், முஸ்லிம்கள் பதிலடி கொடுப்பதற்கு வாள் ஏந்தும் நிர்பந்தத்திற்கு ஆளாகியிருந்தார்கள்.

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: தற்போது அப்படி எந்த மார்க்கப் போரும் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழவில்லை. தற்போது ஒரு கூட்டம் அல்லது பிரிவு மார்க்கத்தின் பெயரால் போருக்கான போதனை கொடுக்கின்றது என்றால் பின்னர் அது எங்களது பார்வையில் தவறானதாகும்.



A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

எங்களது கொள்கை என்னவென்றால், இறுதிக் காலத்தில் முஸ்லிம்களுக்கு மார்க்கப் போர் புரிவதற்கான அவசியம் இல்லை. இன்னும் கூறப்போனால், இஸ்லாத்தின் அமைதி மற்றும் சாந்தி நிறைந்த போதனையை முன்வைப்பதற்கான அவசியம் இருக்கின்றது. மேலும், நாங்கள் எல்லா இடத்திலும், எல்லா மட்டத்திலும், இந்த அமைதியின் போதனையை முன் வைத்து வருகின்றோம். ஆரம்பகால முஸ்லிம்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி அமல் செய்யக் கூடியவர்களும் இதே போதனையைத்தான் முன்வைத்து வந்தார்கள்.

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: இஸ்லாத்தின் எதிரிகள் மற்றும் (பல) முஸ்லிம்களும் கூட உண்மையான இஸ்லாத்தின்படி அமல் செய்யவில்லை. அவர்கள் இஸ்லாத்திற்கு அவப் பெயர் சேர்த்தனர். மேலும் இஸ்லாத்தை இழிவுபடுத்தக் கூடிய கருத்துகள் இந்த முஸ்லிம்களின் காரணமாகவே பரவியுள்ளன. அந்தக் கருத்துகளை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், அவர்கள் இஸ்லாத்தின் சரியான போதனைகளின்படி அமல் செய்வதில்லை.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: கடந்த ஆண்டுகளில் நாங்கள் Muslims For Peace என்ற பெயரில் திட்டத்தை துவங்கினோம். மேலும் தப்பெண்ணங்கள் அகல வேண்டும் என்பதற்காக முதல் முறையாக மருத்துவ மனைகளுக்கு பத்தாயிரம் யூனிட் இரத்த தானம் கொடுத்தார்கள். அமைதிக்கான தூதுச் செய்திக்காகவும், மனித குலத்தின் மீதான நேசத்தின் காரணமாகவும் நாங்கள் இவ்வாறு செய்தோம்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிகள் அமைதியை விரும்பக் கூடிய குடிமக்கள் ஆவர்; மேலும் அவர்கள் சட்டத்தை பேணி நடக்கக் கூடியவர்கள் ஆவர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மேலும் நாங்கள் எதனை கூறுகின்றோமோ அதனையே செய்யக் கூடியவர்கள் ஆவோம்.

கேள்வி: மதம் மற்றும் அரசியல் ஒன்றிணையக் கூடாது என்பதை நீங்கள் ஏற்கின்றீர்களா? மேலும் இஸ்லாமிய அரசாங்கம் என்ற பெயரில் அரபு நாடுகளில் போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதற்கான முயற்சி நிகழவில்லையென்றால் அதனால் இஸ்லாத்தின் மீதான தாக்கம் சிறப்பாக இருக்குமா?

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: அரபுநாட்டின் அரசாங்கங்கள் அகற்றப்பட்டன ; அதற்கு மேற்கத்திய சக்திகள்தான் ஆதரவு அளித்து வந்தன என்பதை எனக்கு வேதனையுடன் கூற நேரிடுகின்றது. மேலும் தற்போதைய அரபு நாடுகளின் இந்த போராட்டங்களில் மேற்கத்திய சக்திகள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கு பின்னால் என்ன கருத்துகள் மற்றும் சிந்தனைகள் இருக்கின்றன? என்பதை நான் அறியேன். ஆனால், இந்த போராட்டங்களின் மூலம் மேற்கத்திய சக்திகள் இஸ்லாம் மற்றும் அரபு நாடுகளை கட்டுப்படுத்த விரும்புகின்றன என்பதை நான் மீண்டும் மீண்டும் மிகவும் அழுத்தத்துடன் கூறியிருக்கின்றேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எகிப்தில் என்ன கண்டு கொண்டிருக்கின்றீர்கள்? போராட்டத்திற்கு ஏதாவது விளைவு வெளிப்பட்டதா? மக்கள் அதிபர் ஹுஸைனீ முபாரக் அவர்களுக்கு எதிராக இருப்பதாக எண்ணம் இருந்தது. ஏனெனில், அவர் பொதுமக்களுக்கு அவர்களின் உரிமைகளை கொடுப்பதில்லை என்ற எண்ணம் இருந்தது. ஒவ்வொரு இனத்திற்கும் அவர்களுடைய அரசாங்கம் இருக்கின்றது. முழு நாட்டின் அமைதியும், நிம்மதியும் சீர்கெட்டுள்ளது. ஏதாவது செய்யவில்லையென்றால் பின்னர் அபாயகரமான விளைவுகள் வெளிப்படக் கூடும் என்று லெபிய்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரதம மந்திரியை எச்சரிக்கை செய்தார்.

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: உண்மையில் இந்த அனைத்து இயக்கங்களும் முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு தனது சொந்த நலன்களை பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. இவை அனைத்தும் இஸ்லாத்தின் பெயரால் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஜனநாயகத்திற்கான ஆசை இருக்கின்றது என்றால், பின்னர் இந்த ஸ்திரத்தன்மையற்ற நிலையை முடிவிற்கு கொண்டு வருவதற்காக உண்மையில் ஜனநாயக அரசாங்கத்தை நிறுவ வேண்டும்.

கேள்வி: இந்த இயக்கங்கள் உண்மையான ஜனநாயகத்தை நிறுவுவதற்கு ஆதரவாக இருக்கின்றனவா? அல்லது இஸ்லாமிய அரசாங்கங்களை நிறுவ விரும்புகின்றனவா? என்று நிருபர் கேட்டார்.

பதில்: இந்த கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

சவுதி அரேபியாவிலும், வேறு ஒரு சில நாடுகளிலும் மன்னராட்சி வாரிசு உரிமையின் அடிப்படையில் கிடைத்துள்ளது. மேலும், அவர்களை தவிர்த்து பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் அரைகுறையான ஜனநாயக அமைப்பு நிலை பெற்றுள்ளது. மேற்கத்திய சக்திகள் அமைதியை நிலைநாட்ட விரும்பினால் பின்னர் ஜனநாயக அரசாங்கங்களை நிறுவுவதில் அவர்களுக்கு உதவி செய்யட்டும்.

கேள்வி: அவர்களால் அப்படி செய்ய முடியுமா? ஏனெனில், இந்த சூழலில் உள்விவகாரங்களில் தலையிடுவதாக குற்றச்சாட்டு சுமத்தப்படக் கூடுமே? என்று அந்த நிருபர் கேட்டார்.

பதில்: இந்தக் கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்:

சமீபத்தில் தான் இஸ்ரேலிய அதிபர் இந்த நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவத்தை நிறுத்துவதற்கான ஆலோசனையை முன்வைத்தார். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவத்தில் ரஷ்ய இராணுவப் படைகளை சேர்க்கக் கூடாது என்பதும் அவசியமாகும் என்று கூறியிருந்தார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நாடு தவறிழைக்கும்போது, அது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றது என்றால், மேலும் தனது குடிமக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை கொடுக்கவில்லை என்றால், பின்னர் அந்த நாட்டை அநீதியிழைப்பதிலிருந்து தடுப்பதற்காக அண்டை நாடாக இருக்கும் நாடுகள் அதற்கு எதிராக நிற்க வேண்டும். மேலும், அநீதியை நிறுத்துமாறும், அமைதியை நிலைநாட்டுமாறும் அதனை நிர்பந்திக்க வேண்டும். ஆக, நீங்கள் இந்த நாடுகளுக்கு ஏதாவது உதவி செய்ய விரும்புகின்றீர்கள் என்றால், பின்னர் அக்கம் பக்கத்து நாடுகளின் மூலமாக செய்ய வேண்டும். பின்னர் அக்கம்பக்கத்து நாடுகள் அங்கு அமைதியையும், உண்மையான ஜனநாயகத்தையும் நிறுவுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் உதவி செய்ய வேண்டும்.

கேள்வி: சிரியாவில் போர் அதிகரித்துக் கொண்ட செல்லும் நிலையில் போரை நிறுத்துவதற்காக தாங்கள் என்ன ஆலோசனையை முன்வைக்கின்றீர்கள்? என்று நிருபர் கேட்டார்.

பதில்: இதற்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்;

சிரியாவில் அலவியர்களின் அரசாங்கம் இருந்து வந்துள்ளது. அரசாங்கம் சன்னிப் பிரிவு மக்களை நல்ல முறையில் டீல் செய்வதில்லை. அரசாங்கத்தில் சன்னிப் பிரிவு மக்களிடத்தில் சில பொறுப்புகள் இருக்கின்றன. இருப்பினும், அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்படுவதில்லை என்ற எண்ணம் இருக்கின்றது. துவக்கத்தில் கிளர்ச்சியாளர்களின் போராட்டத்தால் சன்னிப் பிரிவினர் மற்றும் அலவிகளிடத்தில் கருத்து வேறுபாடு உருவானது. ஆனால், தற்போது பல பிரிவுகள் இருக்கின்றன. அவர்களுக்கிடையில் பரஸ்பர நலன்கள் இருக்கின்றன. இவர்கள் இந்த போராட்டத்தில் அவர்களுடன் இணைந்துவிட்டனர். தற்போது இது சன்னிப் பிரிவினரின் உரிமைகளை பறித்தல் என்ற அளவில் விவகாரம் இல்லை. மேற்கத்திய நாடுகளின் நலன்களுக்கான விவகாரமாகும். அவர்களுக்குள் நிச்சயமாக தீவிரவாதத்தை விரும்பும் சக்திகளும் இருக்கின்றன. கிளர்ச்சியாளர்களுக்கு மத்தியில் பிரிவினை இருக்கின்றது. மேலும், அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துக்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 17 APRIL 2025 Issue No 16

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொண்டிருக்கின்றனர். இந்தப் போராட்டம் அரசாங்கத்தின் அநீதியின் காரணமாக துவங்கியிருந்தாலும் தற்போது இரு தரப்பினரும் நம்பிக்கை துரோகிகளாக இருக்கின்றனர். ஏதாவது ஒரு நீதியான தீர்வை எதிர்கால அமைதியை கருத்தில் கொண்டு அடைந்தே தீர வேண்டும்.

கேள்வி: அண்டை நாடுகளில் முழுமையான அமைதியை நிலவச் செய்வது யாருடைய பொறுப்பாகும்? ரஷ்யா அமைதிக்கான முயற்சியை மீண்டும் துவங்கும் திட்டத்தை தீட்டி வருகின்றது? என்று நிருபர் கேட்டார்.

பதில்: இந்தக் கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

தற்போது உலகம் உலகளாவிய கிராமம் ஆக ஆகிக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவரும் பிறரின் நிலைமைகளால் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். இவ்வாறு கூறப்படுகின்றது: அதாவது முன்னர் இரண்டு வல்லரசுகள் இருந்தன. அதன் காரணமாக ஒரு வகையில் சமநிலை நிலைபெற்றிருந்தது. தற்போது ரஷ்யா சிரியா நாட்டிற்கு உதவி செய்து வருகின்றது. மற்றொரு பக்கம் மேற்கத்திய சக்திகள் கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றன. இந்த விவகாரத்தில் ஏதாவது ஒரு தீர்வு ஏற்படுவதும், அமைதி நிலைபெறுவதும் ரஷ்யா மற்றும் மற்ற நாடுகளின் நலனுக்கு உகந்ததாகும். இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லை என்றால், பின்னர் ஒரு போரின் நிலை உருவாகி விடக் கூடும். அது முழு உலகையும் தனது தாக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடக் கூடும். இந்த விவகாரத்தில் ஏதாவது அமைதி நிறைந்த மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஏதாவது தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை தற்போது பெரும் வல்லரசுகள் உணரத் தொடங்கிவிட்டன.

கேள்வி: பாகிஸ்தானில் உங்களது ஜமாஅத்திற்கு முஸ்லிம்களுடன் இருக்கும் கருத்து வேறுபாடுகளை பற்றி கூறுங்கள் என்று நிருபர் கேட்டார்:

பதில்: இந்த கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நான் ஏற்கனவே சுருக்கமாக கூறியிருப்பது போன்று, இறுதி காலத்தில் ஒரு நபர் தோன்றுவார்; அவர் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவார்; மேலும், அவர் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் சரியான போதனைகளை முன்வைப்பார் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாகும். அதற்கு ஏற்ப எங்களது கொள்கையின் அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இந்த முன்னறிவிப்புக்கு ஏற்ப தோன்றி விட்டார்கள். மேலும், அன்னார் (அலை) மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் புரிந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்ற இருந்த அந்த நபருக்கு நபி என்று பெயர் சூட்டியுள்ளார்கள். எங்களது கொள்கைக்கு ஏற்ப அன்னார் நபி ஆவார்கள். மேலும், அவர் எப்படிப்பட்ட நபி என்றால், அவர் எந்த வேதத்துடனும் நபியாக தோன்றவில்லை. மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வேதத்தை பின்பற்றியே வந்துள்ளார்கள்.

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: (அஹ்மதி அல்லாத) மற்ற முஸ்லிம்கள் கூறுகின்றனர்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வரமுடியாது. ஏனெனில், அன்னார் (ஸல்) காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள். மேலும், அவர்கள் கொடுக்கும் காத்தமுன் நபிய்யீன் என்பதற்கான விளக்கத்தின் படி எந்த வகையான நபியும் வரமுடியாது. அதே சமயம் நாங்கள் கூறுகின்றோம்: வேதம் வழங்கப்படாத நபி தோன்ற முடியும். எங்களது எதிரிகள் இந்த விவகாரத்தை ஊதி பெரிதாக்குகின்றனர். மேலும், எப்படிப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன என்றால், அவற்றின் அடிப்படையில் சட்டம் மற்றும் விதிகளின் நோக்கங்களின்படி நாங்கள் முஸ்லிம்கள் கிடையாது. ஜெனரல் ஸியாவுல் ஹக்கும் பிற்காலத்தில் கடுமையான சட்டங்களை இயற்றினார். மேலும், சட்டங்களை அமல்படுத்துவதற்கு முயற்சி செய்தார். இந்த எதிர்ப்பு என்பது லட்சக்கணக்கில் அஹ்மதிகள் வசித்து வரும் பாகிஸ்தானில் மட்டுமே கிடையாது. இன்னும் கூறப்போனால், மற்ற முஸ்லிம் நாடுகளிலும் இருக்கின்றது.

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: அஹ்மதிகளுக்கு பிரச்சாரத்திற்கும், இஸ்லாத்தின்படி அமல் செய்வதற்கும் அனுமதி கொடுத்து விட்டால் பின்னர் அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை தமது தப்லீஃக் மற்றும் தமது அமல்களால் தாக்கத்திற்குள்ளாக்கி அஹ்மதிகளாக்கி விடுவார்கள் என்ற அச்சம் பாகிஸ்தானிய முல்லாக்களுக்கு இருக்கின்றது.

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: எதிர்ப்பை பொருத்த வரை இந்தியாவில் முஸ்லிம்களின் புறமிருந்தும் எதிர்ப்பு உள்ளது. சவுதி அரேபியாவில், லெபியாவில், எகிப்தில், இந்தோனேஷியாவில், மற்றும் ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் எதிர்ப்பு உள்ளது. ஆக, நாம் கூறுவது இது மட்டுமே ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு வேதம் வழங்கப்படாத நபியும் வர முடியும். அதே நேரம் எந்த நபியும் வர முடியாது என்று அஹ்மதி அல்லாதோர் கூறுகின்றனர். இந்த விஷயம் அவர்களுக்கு மிகப் பெரிய விவகாரமாக ஆகியிருக்கின்றது. அதனை அவர்கள் பெரிதாக்கி முஸ்லிம்களின் உணர்வுகளுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அஹ்மதிகளுக்கு எதிராக தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்களின் வினையும் (Action) செயல்முறையும் இஸ்லாத்திற்கு எதிரானதாக இருக்கின்றது. முஸ்லிம்களின் புறமிருந்து இழைக்கப்படும் இந்த அநீதிகளுக்கு மத்தியிலும் நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றோம். ஆஃப்ரிக்காவிலும், ஏனைய நாடுகளிலும் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒவ்வோர் ஆண்டும் அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர். இந்தோனேஷியாவிலும் அஹ்மதிகள் மீது அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன. அஹ்மதிகள் ஷஹீதாக்கப்படுகின்றனர். ஆனால், இதன் பின்னரும் மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து வருகின்றனர்.

அஹ்மதிய்யத் எங்கு மிக அதிக வலிமையாக இருக்கின்றது? என்ற கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:


மேற்கு ஆஃப்ரிக்காவின் நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலான அஹ்மதிகள் இருக்கின்றனர். தனிப்பட்ட நாடுகளில், பாகிஸ்தானில் அஹ்மதிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்து வந்தது. ஆனால், தற்போது மேற்கு ஆஃப்ரிக்காவின் சில நாடுகளில் அஹ்மதிகள் மிகப் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றனர். அங்கு அவர்கள் பாகிஸ்தானிய அஹ்மதிகளை விடவும் அதிகமாக இருக்கின்றனர்.(**தொடரும்**.....)

தமிழாக்கம்
மவ்லவி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad